|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 14 குரோதி - விஸ்வாவஸு பங்குனி-சித்திரை ஏப்ரல் 2025 இதழ் 4



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சார்பில் வெளியிடுவோர் :

ஸ்ரீ காமகோடி கோஶஸ்தானம்



# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## பங்குனி – சித்திரை

மலர் 14 ஏப்ரல் 2025 இதழ் 4

### பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 4 |
| தெய்வத்தின் குரல்<br>பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 6 |
| நீதிக் கதைகள்<br>பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 8 |
| அனுக்கிரஹ பாஷணம்<br>பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 13 |
| ஸ்ரீஸதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகள் | 16 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 21 |
| வேத ஸூக்தங்கள் | 22 |
| ஆகார சுத்தம் | 24 |
| சித்திரை மாத விசேஷ தினங்கள் | 27 |
| அநுகீதாபர்வம் | 28 |
| சுகநாஸ உபதேசம் | 31 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 35 |
| ஆச்சார்ய பரம்பரை | 38 |
| பெண்கள் தெரிந்து கொள்ள | 40 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ | 43 |
| கற்பின் சிகரங்கள் பேசினால் | 45 |
| ப்ரபோத சிந்தாமணி | 47 |
| மூக ஸாரம் | 48 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


**நிர்வாகக் குழு**

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்




# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


**கௌரவ தலைமை ஆசிரியர் :**

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

**ஆசிரியர் குழு :**

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா



**வெளியிடுவோர் :**

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

**அலுவலக முகவரி :**

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் – 631502.
தொலைபேசி : 044 – 27233115

**மின் அஞ்சல் :**

kamakotipradeepam@gmail.com

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/– |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/– |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/– |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/– |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/– |
| புரவலர் | ரூ. 10000/– |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை

# प्रार्थना

***மந்தாக்ரணீரஹம் தவ மயி கருணாம் கடயிதும் விபோ நாலம்***
***ஆக்ரஷ்டும் தாந்து பலாதலமிஹ மத்தைன்யமிதி ஸமாஸ்வஸிமி ।।***

*நான் மூடர்களுள் முதல்வன். ஹே விபோ ! என்னிடத்தில் உன் கடுமையைச் செலுத்துவது உசிதமல்ல. ஆயினும் உனது கருணையை பலாத்காரமாய் இழுப்பதற்கு எனது தைன்யம் சக்தியுடையது என்று எண்ணி ஸமாதானம் அடைகிறேன்.*

***த்வம் ஸர்வக்யோ அஹம் புனரக்யோ அனீசோஹம் ஈஸ்வர: த்வமஸி***
***த்வம் மயி தோஷான் கணயஸி கிம் கதயே துததி கிம் தயா நத்வாம் ।।***

*ப்ரபோ! நீர் எல்லாமறிந்தவர். நானோ மூடன். நீரோ சர்வசக்தன், நானோ சக்தியற்றவன். அப்படி இருந்தும் என்னுடைய தோஷங்களைக் கவனிக்கிறீர்.*

*தயவானது உம்மை பீடிக்காவிட்டால் நான் இவ்விஷயமாய் என்ன சொல்வேன்?*

*ஸ்ரீதர அய்யாவாளின் ஆர்த்திஹர ஸ்தோத்ரம்*

***எல்லா உயிரும் இன்பமெய்துக.***
***எல்லா உடலும் நோய் தீர்க***
***எல்லா உணர்வும் ஒன்றாதலுணர்க***
***தான் வாழ்க அமுதம் எப்போதும் இன்பமாகுக.***

*பாரதியாரின் வசன கவிதை*

*ஜம் ஜீவனுள்ளாதாகட்டும். பர்ஜன்யன் பொழிந்து தான்யங்கள் பக்வமாகட்டும். ஓஷதிகள் செழிப்பாகட்டும். அக்னி அணுக சுலபமாகட்டும். வானமும், காற்றும், புவியும், இரவும், பகலும், பக்ஷங்களும், மாதங்களும், ருதுக்களும், வருஷமும் மங்களமாக வேண்டும்.*

*க்ருஷ்ண யஜுர் வேதம்*

# ஆசிரியர் பக்கம்

***கடந்த இதழில் எழுதப்பட்ட அங்கலாய்ப்புக்கு ஸ்ரீ விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் கர்நாடகத்தில் ப்ராம்மண சங்கத்தில் ஏழு கட்டளைகளை அருளிச் செய்துள்ளார். அவர் கட்டளைகள் ப்ராம்மணத்வம் ஏற்பட வழிசெய்யும். அவை பற்றிப் பார்ப்போம் :***

1. *ஸனாதன தர்மம் நமது ஆதாரம். அதற்கு ப்ராம்மணர்கள் ஆணி வேர் போன்றவர்கள். த்ரிகால ஸந்த்யா வந்தனமும் காயத்ரி உபாஸனை , ஔபாஸனம், ஆதித்யம் [விருந்தோம்பல்] மூலம் அதைக் காப்பாற்ற வேண்டும். மேலும் சமையல் வீட்டிலேயே நடக்க வேண்டும்.*

2. *ப்ராம்மணர்கள் பாரதத்திலேயே இருக்க வேண்டும். நமது கலாசாரம், ஆன்மீகத்வம் இதனால் செழிப்புறும். நாட்டின் வளர்ச்சிக்கும், கல்விக்கும் முக்யமாக வேதக் கல்வி வளரவும் அவர்களது பங்கு அவஸ்யம்.*

3. *ப்ராம்மணர்கள் அக்ரஹாரம் அல்லது* 'Gated Community' *ஆக மன ஒருமைப்பாடோடு சேர்ந்து இருத்தல் நலம் தரும். இது ஒரு நல்ல ஒருங்கிணைந்த குழுவை உருவாக்கும்.*

   *இது வைதிக வழியாக நமது கலாசாரம், கல்வி, விக்யானம் இவற்றை நல்ல முறையில் வளர்க்கும். நமது மதத்தை காக்க வழி செய்யும்.*

4. *ப்ராம்மண சமுதாயம் அவர்களை மீடியாக்களிலும், சினிமாக்களிலும் தவறாகச் சித்தரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கலை, சங்கீதம் இவைகளில் அவர்களது பங்கை இன்னும் சிறப்பாகச் செய்ய வேண்டும்.*

5. *ப்ராம்மணர்கள் தங்களது க்ராம சம்மந்தத்தை விடக் கூடாது. ப்ராம்மணர்கள் அவர்களது க்ராம தொடர்பை விட்டால் க்ராமத்திற்கு வழிகாட்ட யாரும் இருக்க மாட்டார்கள்.*

6. *ஒவ்வொரு ப்ராம்மண வீட்டிலும் அவர்களது கோத்ரம், வம்சாவழி முதலிய வற்றை பதிவு செய்து வைக்க வேண்டும். கோவில் பராமரிப்பு, உடை தரித்தல் இவைகளில் நமது பாரம்பர்யத்தைக் காக்க பாரம்பர்யமாகவே நடக்க வேண்டும்.*

7. *பழங்காலத்தில் ஆஸேது, ஹிமாசலம் வரை ப்ராம்மணர்கள் அரச பதவியில் இருந்து வழி நடத்தினர். இக்காலத்தில் அரசாங்கத்தின் மாறுபட்ட கொள்கையால் நிலை மாறி உள்ளது. அரசாங்கமும் இதைக் கவனித்து அவர்களுக்கு உரிய ஸ்தானத்தைக் கொடுக்க முயல வேண்டும்.*

*இவை பால பெரியவாளுடைய ஆத்மார்த்தமான வேண்டுகோள். என்றும் நம்மால் கடைபிடிக்கப்பட வேண்டியவை. கால மாறுபாட்டினால் இப்போது இவை கட்டாயப்படுத்தப்படுகின்றன. இவை எல்லாமே இரு நூறு ஆண்டுகளுக்கு முன் நம் முன்னோர்களால் கடைபிடிக்கப்பட்டு வந்தவையே. **'பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்'** என்னும் நிலையைத் தவிர்த்து **'ப்ராம்மணத்வம்'** மறு மலர்ச்சி அடையப் பாடுபடுவோம் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்கள் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.*

***ஜய ஜய சங்கர ! ஹர ஹர சங்கர !***

*புதிய வருடம் விஸ்வாவஸு பிறக்கிறது. உலகெங்கும் குழப்பம். போர்கள் ஒருவருக்கொருவர் அவ நம்பிக்கை, அமைதியின்மை இவை மறைய நல் வருடம் ஆக பாகவத ஸ்லோகம் மூலம் ப்ரார்த்திக்கிறோம்:*

***'ஸ்வஸ்த்யஸ்து விஸ்வஸ்ய கல:***
***ப்ரஸீததாம் த்யாயந்து பூதானி சிவம்***
***மதோ தியா மனஸ்ச பத்ரம் பஜதாத்***
***அதோக்ஷஜே ஆவேஸ்யதாம் நோ மதிரப்ஹைஹதுகீ'***


*உலகிற்கு நன்மை உண்டாகுக. துஷ்டன் மனது தெளியட்டும், அனைத்துப் ப்ராணிகளும் ஒருவருக்கொருவர் நன்மையே உள்ளூர விரும்பட்டும். மனது மனக் களத்திலேயே நாட்டமுடையதாகுக. நம் மனமெல்லாம் காரணமின்றி க்ருஷ்ணரிடம் புகலடையட்டும் என்று வேண்டிக் கொண்டு புத்தாண்டை வரவேற்போமாக.*

# தெய்வத்தின் குரல்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## கீதை காட்டும் தர்ம சக்கரம்

உண்மை யாதாயினும், நாம் அவனை மறந்து விட்டாலும் நம்மை மறவாத கருணையுடன் பகவானே தான் தனது தர்ம சக்கரத்தை நமது கொடிக்கு நடுநாயகமாக இடம் பெறச் செய்து, அதன் மூலம் இன்றைய கொள்கைச் சூழ்நிலை எப்படியிருந்தாலும் எதிர்காலத்தில் அநுபவத்தால் படிப்பினை பெற்றேனும் இக்கொள்கையைக் கைவிட்டு, இந்நாட்டுக்கே ப்ரத்யேகமாக உரிய மரபு வழியில்தான் நம் நாடு சென்று, உலகின் ஏனைய நாடுகளுக்கு ஒரு நல்ல மாற்றாகவும், மாற்று மருந்தாகவும் புகழ் கொள்ளுமென நன்னம்பிக்கை ஊட்டுகிறார் என்றே நாம் கொள்கிறோம். இதற்குக் காரணம் இதே தர்ம சக்கரப் பிரவர்த்தனக் கருத்தை இதே சொற்றொடரால் அப் பரமத ஸ்தாபகருக்குப் பல்லாயிரம் ஆண்டு முன்பே சக்கரக் கரத்தனான கிருஷ்ண பகவான் சநாதன தர்மத்தின் முக்கியமான ஆதார நூல்களிலொன்றான கீதையில் கூறியிருப்பதுதான். அப்புனித நூலில் (3-16) ''**ஏவம் ப்ரவர்த்திதம் சக்ரம்**'' – இவ்வாறு சுழன்று வரும் சக்கரம் - என்றே மாந்தரின் உயரிய வாழ்க்கைக்குத் தாமளித்துள்ள ஒழுங்கு அமைப்பான தர்மத்தைச் சக்கர வடிவாக பகவான் கூறியுள்ளார். 'இவ்வாறு' என்பது 'எவ்வாறு' என்பதையும் சுருங்கக் கூறி விளங்க வைக்கிறார். உயர் வாழ்வின் அமைப்புக்கு மைய இருசாகவுள்ள தர்மம் என்பது காரணம் – விளைவு (cause and effect) என்று தொடர்ச்சியாகப் பல அம்சங்கள் கொண்ட ஒரு வெளி வட்டத்தின் சீரான சுழற்சியாகவே பரிணமிப்பதால் சக்கரமாக உவமிக்கப்படுகிறதென அங்கு காட்டுகிறார். அத்தொடரை மானுடன் என்ற இறுதி விளைவில் ஆரம்பித்து யாவற்றுக்கும் ஆதி காரணமாம் பரம்பொருளுடன் முடிக்கிறார்.



ஒன்றையொன்று பற்றிச் செல்லும் ஆறு அங்கங்கள் கொண்டது அத்தொடர். அது யாது?

மகிழ்ச்சிக்குரிய மற்றொன்று, தேசத்தின் இலட்சிய வாசகமாகவே உபநிஷத வாக்கான **'ஸத்யமேவ ஜயதே'** என்பதைத் தேர்ந்தெடுத்திருப்பதாகும். இதனால் உண்மையே வெல்லும் என்பது சநாதன தர்மத்தின் ஆதார சாத்திரமாம். வேதத்தின் பெரும் பிரமாணத்திலேயே மக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் இங்குங்கூட அந்த நவீன மனப்பான்மையாளருக்கு உரிய விதத்திலேயே, மத சாத்திரம் - தத்துவ சாத்திரம் என்று மேநாட்டார் வேறுபடுத்திக் கூறும் இரண்டில் இவ்வாசகம் ஹிந்து மதமாகக் கொள்வதற்கின்றி எல்லோருக்குமுரிய தத்துவ சாத்திரமாயும், அதோடு உலகெங்குமே ஒரு நன்னெறியில் கருத்து என்ற அளவில் வழங்கப்படுவதாயுமிருப்பதாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் பேசப்பட்டது. எவ்விதமாயினும் மறைமொழியே தேசிய இலட்சிய வாசகமாயிருப்பதைப் பாராட்டுகிறோம்.

## தர்ம சக்கரம் சுழலும் தொடர்பாதை தியாகமே — அதன் ஸாரம்

**'அன்னத்திலிருந்து உயிர்கள் உண்டாகின்றன'** என்று பகவான் இத்தொடரை ஆரம்பிக்கிறார். இவ்வண்ணம் என்பது யாது, அதற்கு எதனால் இம்முக்கியத்துவம் எனப் பார்ப்போம்.

தன்னலம் பாராது பிறர்க்கென உடைமைகளை ஆக்கும் தியாகமே சநாதன வேத தர்மம் வகுத்தளிக்கும் நமது வாழ்க்கைத் தருமம். அத் தியாகமே யாகம் எனப்படுகிறது. 'யாகம்' என்பது எல்லா சிறந்த வஸ்துக்களையும் தனக்கென்றில்லாமல் தியாகமாக அக்கினியில் அர்ப்பணித்து, அத் தீக்கடவுளின் மூலம் அவை உலகப் பேரரசனான ஈசனின் அதிகாரிகளாக அவ்வுலகை பரிபாலிக்கும் தேவர்களைச் சென்றடைந்து, அதற்குப் பிரதியாக அவர்கள் ஜீவகுலம் முழுதற்கும் மேன்மை பொருந்திய இன்ப வாழ்வுக்கான சகலத்தையும் அருளுமாறு செய்ய உதவும் வைதிகச் சடங்கே. மேநாட்டினரும் யாகம், அதன் அடிப்படையான தியாகம் ஆகிய இவ்விரண்டையும் sacrifice என்றே கூறுவது கவனத்திற்குரியது. இத் தியாக தர்மத்தைப் புரியவும், நாம் உயிரைக் காத்துக் கொண்டு வாழ்ந்தால்தான் முடியுமாதலின், பிறர்க்களிப்பதை முக்கியமாகக் கொண்டு அதற்கு எஞ்சியதை அத்தியாவசியச் சுயநுகர்ச்சிக்கு நாமும் ஏற்பதாக வெகு சிக்கன வாழ்க்கையை நடத்த வேண்டும். அவ்வாறு எஞ்சியதை, தேவர் உண்டு மிகுதி வைத்த பிரசாதம் என்ற புனித எண்ணத்துடன் ஏற்றுப் புனித வாழ்வு வாழ வேண்டும். இதுவே

வேத தர்ம விதி. **உம் :** உபநிஷத வரிசையில் முதலிடம் பெறும் 'ஈச'த்தின் முதல் மந்திரமே. 'சொந்த நுகர்ச்சியால் ஒரு பொருளிலிருந்து மனிதன் நிறை பயனைப் பெறவியலாது; பிறருக்குத் தியாகம் செய்தே, தியாகம் செய்த பொருளிலிருந்து பெறக்கூடிய நிறைபயனை அடைவாயாக!'' என்ற கருத்தினைக் கூறி, அதில் மாந்தரைச் செயற்படத் தூண்டும் ஒப்பற்ற மந்திரம். இவ்வாறு ஈத்துவப்பதில் (ஈந்து உவப்பதில்) அன்னம் வழங்குதலே முதலிடம் பெறுகிறது. ஏனெனில் அன்னத்தினால்தானே உயிர்கள் உண்டாகி வளர்கின்றன? இதுவே (கீதையில்) பகவான் கூறும் காரண விளைவுத் தொடர்ச்சியில் ''அன்னத்திலிருந்து உயிர்கள் உண்டாகின்றன'' என்ற வாசகமாக முதலிடம் பெறுகிறது.

அவ் அன்னம் எதிலிருந்து உண்டாகின்றது? மழையினால், மழை பெய்து பயிர் பச்சை வளருவதால். ''மழையிலிருந்து அன்னம்'' என்று பகவான் தொடர் சங்கிலியில் இரண்டாவது இணைப்பைக் கோக்கிறார்.

மழை எதிலிருந்து உண்டாகிறது? முன்னரே கூறியவாறு, சர்வலோக சக்கரவர்த்தியாம் ஈசனின் ஆக்ஞைப்படிச் செயலாற்றும் அதிகாரிகளான – இயற்கைச் சக்திகள் என நாம் கருதுகின்ற – தேவர்களுக்கு, உலக மாந்தரின் நலன் கருதியே நாம் உடைமைகளைத் தீயிலிட்டு தீக் கடவுள் மூலம் சேர்ப்பிக்கும் தியாகமாம் யாகச் சடங்கினால் அவர்கள் ப்ரீதியுறுகிறார்கள். அதற்குப் பிரதியாகவே உலகுக்கு அவர்கள் பலவித நலன்களைப் புரிவதில் முக்கியமாக உயிரளிக்கும் உணவுக்கானவற்றை உற்பத்தி செய்ய உதவி புரியும் மழையைப் பொழிகின்றனர். ''யாகத்திலிருந்து மழை'' என்பது தொடர் வரிசையில் மூன்றாவது அம்சம்.

யாகம் எதிலிருந்து உண்டாயிற்று? தியாகம் என்ற உள்ளக் கருத்தை மந்திர சக்தியுடன் கூடிய யாகம் முதலிய கருமங்களாக ஆக்கியதால் தான். ''கருமத்திலிருந்து யாகம்'' என்பதே தொடரில் நான்காவது அம்சம்.

மந்திர மகிமையால் வலிவு பெற்ற அக்கர்மங்கள் எதிலிருந்து உண்டாயினவெனில், வேதத்திலிருந்தே. ''வேதத்திலிருந்து கருமம்'' என்று ஐந்தாவது அம்சமாக பகவான் தொடர்சங்கிலியில் கோக்கிறார்.

அவ்வேதம் எதிலிருந்து உண்டாயிற்று? உண்டாவது, அழிவது என்பதின்றி என்றுமுள வேதம், பரமாத்மாவின் மூச்சாக அவருடனேயே பிரிவறச் சேர்ந்திருப்பது. இதனை

பகவான் ஆறாவது அங்கமாக, ''பரமாத்மாவிலிருந்து வேதம்'' எனக் கூறி, ஆதி மூல காரணத்துடன் 'காரணம்-விளைவு' என்ற தத்துவத் தொடரைப் பூர்த்தி செய்கிறார்.

ஆயினும் உபதேசத்தைப் பின்னரும் தொடர்ந்து மானுடனைப் பொறுத்த மட்டில் அவ்வேதம் நிலை கொள்வது அவனது தியாகத்திற்குக் காரிய உருவமாகவுள்ள யாகத்திலேயே என்று சொல்கிறார். தனக்கென வாழாது பிறர்க்குரியாளாராக, நமது உடைமைகளைச் சுருக்கி வாழ்வதே நமக்காக பகவான் விதித்த தர்மம் என்று இங்கு தெளிகிறோம். ஆறு அங்கங்களில் மூன்றாவதாகவுள்ள தியாக யாகத்தையே முடிவிலும் அவர் திரும்பக் கூறியிருப்பதிலிருந்து இது ஐயமறத் தெளிவாகத்தானே செய்கிறது?

இத்தர்ம சக்கர முறைபாட்டை மீறி, சொந்த அநுபோகத்திற்காகவே வாழ்பவர் ஆயுள் முழுதும் பாபத்தையே சம்பாதித்7து வாழ்நாளை வீணாக்கி முடித்தவராவர் என்று எச்சரிக்கையும் விடுக்கின்றார்.

தமிழ் மறையாம் திருக்குறளின் ஆரம்ப அதிகாரமான கடவுள் வாழ்த்தில் 'அறவாழி (அற – தர்ம; ஆழி – சக்கரம்) அந்தணன்' எனக் கூறப்படும் தர்ம சக்கரம் தாங்கிய பகவானே தான் இன்றில்லாவிடினும், சமீப எதிர்காலத்திலேனும் நம் கண்களைத் திறந்து வைத்து நாம் வீணராகாது அவனது உபதேசப்படி சொந்த உடைமைப் பெருக்கத்தை விடுத்து, உலகுக்கு உதவி செய்யவே வாழும் தியாக தர்மத்தை மேற்கொள்ள அருள் புரிய வேண்டும்.

நமக்குக் கிடைத்துள்ள அரசியல் சுதந்திரம் இவ்வாறு அவரருளால் நமது தேசத்திற்கே உரிய ஸ்வ-தந்திரமாகி அரிய பயன்களாகிய அறத்தையும், அற வாழ்வின் தேவைக்கேற்ற அத்தியாவசியப் பொருளையும், அறத்துக்கு மாறுபடாத பயன்களைத் தரும் இன்பத்தையும், பேரின்பமான வீட்டையும் அளிக்கட்டும்!

சக்கரத்தைத் தேர்ந்தெடுப்பதில் சங்கேதமாக மற்றுமொரு கொள்கையும் தெரிவிக்கப்படுகிறதோ என்று ஐயுறுவோரும் உள்ளனர். நம்முடைய 'தேசாசாரம்' என்ற பிரத்தியேக மரபு எளிய வாழ்க்கைதான் என்றும், இயந்திர உதவியை நாடாது, எளிய வாழ்க்கைக்கான சிறிய அளவினதான உபகரணங்களை, பெருத்த ஜனத்தொகை படைத்த நம் நாட்டில் முக்கியமாக மக்களின் உடலுழைப்பிலிருந்தே கைத் தொழிலாகத்தான் பெற வேண்டும் என்றும் சுதந்திரப் போராட்டத் தலைவர்களில் முதலிடம் கொண்ட மஹாத்மா கருதினார். அந்தக் கருத்துக்கு உருவகமாகக் குடிசைத் தொழிலாக உடலுழைப்பின் மூலம் நடக்கும் நெசவுக்குத் தேவைப்படும் எளிய

கருவியான கைராட்டையாம் சர்க்காவைத் தமது கட்சியின் கொடி நடுவில் பொறிக்கச் செய்தார். ஆனால் அவ்வழிக்கு மாறாக, மேநாட்டுப் பாணியில் பெருக்கமான சுகபோக சாதனங்களுடன் வாழ்க்கை நடத்தும் முறையையே சுதந்திர பாரதத்தில் நிறுவ விரும்புகிறோம் என்றும், அதற்குத் தேவையான ஏராளமான உபகரணங்களைப் பெரிய பெரிய இயந்திரங்கள் செயற்படும் ஆலைத் தொழில் மூலமே பெறச் செய்வோம் என்றும் காட்டும் முகமாகவே ஆலை இயந்திரத்திற்கும் அடையாளமாகவுள்ள சக்கரத்தை - 'சக்ரா'வை - சர்க்காவின் இடத்தில் நவீனக் கொள்கைக்காரர்களான தலைவர்கள் பொறித்துள்ளனரோ என்பதே அந்த ஐயம்.

(தொடரும்)


**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

# VEDA RAKSHANA NIDHI TRUST

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/c. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/c No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank** West Mambalam A/c. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank** West Mambalam A/c No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram **A/c No. 411552514 IFSC IDIB b0005085**

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN No. ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

VRNT e.mail :

office@vrnt.org <mailto : office@vrnt.org>

Phone : 044 - 24740549



# நீதிக் கதைகள்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

## தீர்க்க சுமங்கலி

பெண்கள் பெரியோர்களை நமஸ்கரிக்கும் போது, 'நீ தீர்க்க சுமங்கலியாக இருப்பாய்!' என்று ஆசீர்வதிக்கிறார்கள். இதில் உன் கணவன் வெகு காலம் ஜீவித்திருக்க வேண்டும் என்ற கருத்தும் உள்ளடங்கி இருக்கிறது. ஆகவே, பெண்ணினுடைய வாழ்க்கை முழுவதும் கணவனுடைய க்ஷேமத்தைப் பொறுத்தே அமைகிறது. ஒரு பெண் செய்யக்கூடிய நல்லது கெட்டதனுடைய பலனெல்லாம் கூட பூரணமாகப் பெண்ணுக்கே உரித்தாகி விடுகிறதில்லை. அது அவர்களது கணவனைத் தான் சேருகிறது. எனவே, பெண்கள் நல்லதை நிறையச் செய்தால், நல்ல ஆசீர்வாதத்தை நிறையப் பெற்றால், கணவன், குடும்பம் எல்லோரும் க்ஷேமமாக இருக்க முடியும்.

சில பெண்கள் பெரியோர்களை நமஸ்கரித்துக் கொண்டு கீழ்க்கண்டவாறு பிரார்த்தனை செய்து கொள்கிறார்கள்; 'நான் மஞ்சள் குங்குமத்துடன் சாக வேண்டும்.' இதனால் பெண்கள் மஞ்சள் - குங்குமம் தான் இட்டுக் கொள்ள வேண்டும் என்று தெரிகிறது. மஞ்சள் - குங்குமம் என்பது அம்பாளின் நினைவுச் சின்னம். ஆதலால் தற்காலத்தில் உடைக்கு ஏற்றவாறு நெற்றிக்கு இட்டுக் கொள்வது -அல்லது கலர் சாந்தை இட்டுக் கொள்வது- அல்லது நெற்றிக்கே இட்டுக் கொள்ளாமல் இருப்பது போன்றவை வருந்தத் தக்க தாய் இருக்கின்றது. மேலும் நெற்றிக்கு இட்டுக் கொள்வதென்பது- சினிமாவில் எப்படி எல்லாம் இட்டுக் கொள்கிறார்களோ, அப்படியெல்லாம் விபூதி - குங்குமம் ஆகியவற்றை மேலும் கீழுமாக இட்டுக் கொள்வது என்பது சரியல்ல. சினிமாவில் வரும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பொழுதுபோக்காக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, வாழ்க்கைக்கு ஏற்றதாக எண்ணி அமைத்துக் கொள்ளக் கூடாது.

# மங்களப் பொருள்கள்

**'சௌந்தர்யலஹரி'** என்னும் நூலில் ஆதிசங்கர பகவத்பாதாள் பார்வதியை ஸ்தோத்திரம் செய்கையில், 'உன்னுடைய காதணியான தோட்டின் மகிமையினால் தான் ஸ்ரீ பரமேச்வரன் சமுத்திரத்திலிருந்து உண்டான ஆலகால விஷத்தைச் சாப்பிட்டும் கூட, இறக்காமல் இருக்கிறார், என்று கூறுகிறார். அதையே **' தவ ஜனனீ தாடங்க மஹிமா'** என்கிறார். தாடங்கமென்றால் தோடு. எல்லாக் கோயில்களிலும் உள்ள அம்மன், தோடு இல்லாமல்- தாடங்கம் இல்லாமல்- இருக்க மாட்டாள். தோடு என்பது மங்களகரமானது. மங்களத்தை அளிக்கக் கூடியது. ஆகவே பெண்கள்- முக்கியமாக சுமங்கலிகள் - தோடில்லாமல் இருக்கக் கூடாது.

காதில் தோடு, மூக்கில் மூக்குத்தி, கையில் வளையல், காலில் மெட்டி முதலியவை அணிகலன்களாக இருப்பதால், மங்களப் பொருள்களாகச் சொல்லப்படுகின்றன.


தற்காலத்தில் ஒரு கையில் வளையலும், மற்றொரு கையில் கடிகாரமும் கட்டிக் கொள்கிறார்கள்.

அதனால் பல சௌகரியங்கள் இருந்த போதிலும் மங்களம் பெறுவதில் அரைப் பங்கு குறைந்து விடுகிறது. ஆகவே வினைப்பயனால் வரும் துன்பம் ஒருமுறை - நாமே இதுபோன்ற பல காரியங்கள் மூலம் வரவழைத்துக் கொள்ளும் துன்பம் மற்றொரு முறை.

கல்யாணத்தில் முக்கியமானது தாலி கட்டுவதென்பது. அதைத்தான் மங்களசூத்திரம், மங்கள நாண் என்பார்கள். ஆகவே இந்தத் தாலி கட்டுவது என்பது, மூன்று முடிச்சு போடக்கூடிய நூலாகத்தான் இருக்க வேண்டுமென்பது தெரிகிறது. ஆனால் தற்காலத்தில் பலர் தங்கச் சங்கிலியை வாங்கி அதைக் கோத்து விடுகிறார்கள். தாலி கட்டும்போது சொல்லக்கூடிய மந்திரத்தில், 'கழுத்தில் தாலி கட்டுகிறேன்' என்றுதான் இருக்கிறதே தவிர, 'கோத்துப் போட்டு விடுகிறேன்' என்றில்லை. மேலும் தாலி என்பது ஒரு மங்களப் பொருள். அதை அணிகலன்கள் போல் எடுத்து மாட்டி வைப்பதென்பது சரியல்ல. ஒரு விசேஷப் புண்ணிய காலங்களில் - தாலிக்கயிறு நைந்து போகும் சமயம் வேறு கயிறு மாற்றிக் கொள்ளலாம். அணிகலன் போல அவ்வப்போது மாற்றக்கூடாது.

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



**குரூர் பிரம்மா குரூர் விஷ்ணு : குரூர் தேவோ மகேஸ்வரஹா**
**குரூர் ஸாக்ஷாத் பரப்ரம்ம தஸ்மை ஸ்ரீ குருவே நம:**
**அக்ஞானாந்த ககன பதிதாம் ஆத்ம வித்யோப தேசைஹி த்ராதும்**
**ரோகான் பவ தப சிகாத்  தாப பாவத்ய  மாநாத் முக்த்வாத் மௌனம்**

**அக்ஞானாந்த ககன பதிதாத்** - ஒரு காட்டிலே, அக்ஞானம் என்ற காட்டின் நடுவிலே, வசிக்கக் கூடிய மக்களை, அதாவது சிக்கிக் கொண்டு இருக்கக் கூடிய மக்களை, இருளிலே மூழ்கி இருக்கின்ற மக்களை, காப்பற்றுவதற்காக, மௌன நிலையிலே இருந்த பரமேஸ்வரன், மௌனத்தைக் கலைத்து, ஞானோபதேசம் செய்வதற்காக, அந்த ஞானோபதேசத்தின் மூலமாக, இந்தக் காட்டிலே இருக்கக் கூடிய, சிக்கிக் கொண்டு இருக்கக் கூடிய, அஞ்ஞானத்தில் மூழ்கிக் கொண்டு இருக்கக் கூடிய மக்களைக் காப்பாத்தி, அவர்களுக்கு அய்தீக்க, ஆஷ்மிக்க, சுகங்களையும் அளிப்பதற்காக, நல்ல வழிகளைக் காண்பிப்பதற்காக, சரியான வழியைக் காண்பிப்பதற்காக, சங்கராச்சாரியார் சுவாமிகளின் உருவத்தை எடுத்துக் கொண்டு, அதாவது கைலாசவாசியான, பரமேஸ்வரன், மனுஷ்ய ஜன்மாவை ஸ்வீகரித்து, காலடியிலே, கேரளாவில் இருக்கக்கூடிய காலடியிலே, அவதாரம் செய்து, ஞானோபதேசம் செய்கிறார்.

அந்த ஞானோபதேசத்தின் மூலமாக இருள் நீக்கப்படுகிறது - **மௌநேன மந்தஸ்மித பூஷிதேன, மகரிஷி லோகஸ்ய தமோ நுகந்தம்** -தட்சிணாமூர்த்தி ஸ்வரூபியான அந்த பகவத்பாதாள், சம்சார வாழ்க்கையிலே நமக்கு ஏற்படக்கூடிய  அக்ஞானத்தை போக்குகிறார். அவதாரம் என்பது, பல யுகங்களிலே நடந்து கொண்டு இருக்கக் கூடிய

ஒன்று தான் என்றாலும், ஒவ்வொரு சமயத்திலும், ஒவ்வொரு காரணத்தை உத்தேசித்து, இந்த அவதாரம் என்பது அமைகிறது.

வேதங்களைப் காப்பாற்றுவதற்காக முதல் அவதாரமான - **வேதா உத்தரதே**- என்று ஆரம்பித்து, **நரசிம்ஹ சுவாமி** அவதாரம் , **வாமன** அவதாரம், **பரசுராம** அவதாரம், **ராம** அவதாரம்,- **ராமோ விக்ரஹான் தர்மஹா** -என்பதாக **ராம** அவதாரம் இப்படியாக பல அவதாரங்கள் நிகழ்ந்து இருக்கின்றன, பூர்வ யுகங்களிலே.

இந்தக் கலியுகத்திலே, குறிப்பிட்ட நேரத்திற்க்காகவோ, குறிப்பிட்ட காரியக் கிரமத்திற்க்காகவோ இல்லாமல், அனைத்து ஜனங்களின் மனதிலே இருக்கக் கூடிய, தப்பான எண்ணங்களை, சாஸ்திரங்களைப் பற்றிய தப்பான எண்ணங்களை நீக்கி, வேதத்தினுடைய அர்த்தத்தையும், வேதத்தினுடைய தாத்பரியத்தையும் ஸ்தாபிதம் செய்வதற்காக, மனதிலே ஏற்ப்பட்ட துஷ்ட பாவனைகள், அக்ஞானங்களை போக்குவதற்காக இந்த அவதாரத்திலே, பாஷ்யங்களை எழுதி, பக்தியை வளர்ப்பதற்காக ஸ்தோத்திரங்களை எழுதி, உபநிஷதிற்கான-ஈஷ, கேன, கட, ப்ரஷ்ன, முண்ட , மாண்டுக்ய போன்ற உபநிஷத்துகளுக்கான சரியான அர்த்தத்தை ஜனங்களுக்குச் சொல்லி, அதிகார பேத, நியமங்களச் சொல்லி, அதாவது-கர்ம அனுஷ்டானம் தேவை, அதை பக்தியுடன் செய்ய வேண்டும், கர்மாக்கள் நம்மை விட வேண்டுமே தவிர, நாம் கர்மாக்களை விடுவது கூடாது.

வேதத்திற்க்காக மந்த்ரார்த்தங்கள், எப்படி மந்த்ரார்த்தங்கள் சொல்ல வேண்டும், இவ்விதத்துக்கு எல்லாம் உக்தி, உக்தியாகச் சொல்லி, சாஸ்திரங்களுடைய நியாயம், மீமாம்ஸா, வியாகரணம், இது போன்ற சாஸ்திரங்களோடு சேர்த்து, இந்த பாஷ்யத்திலே வியாக்யானம் செய்து, பிரம்ம சூத்திரங்களுக்கு வியாக்கியானம் செய்து, ஞானப் பிரசாத அவதாரமாக இந்த பகவத்பாதாள் அவதாரம் அமைந்து இருக்கிறது.

இதன் மூலம் மனதிலே ஏற்படக்கூடிய சாஸ்திர சந்தேகங்கள் நிவர்த்தி செய்யப்பட்டு. பக்தி மார்க்கமும், கர்ம மார்க்கமும், ஞான மார்க்கமும் சரியான விதத்திலே சொல்லப் பட்டு, அந்த ஆச்சாரியாளுடைய ஞானத்தை, உபதேசங்களை பாஷ்யங்கள் மூலமாக தெரிந்து கொள்கிறோம். அந்த ஆச்சாரியாளுடைய ஜெயந்தி **வைஷாக சுக்ல பஞ்சமி** அன்று , அதாவது இங்லீஷ் ஒன்பதாம் தேதி அன்று (மே 9, 2019) பாரத தேசத்திலேயும், அதே சமயத்திலே இங்கே இருக்கக் கூடியவர்கள் வெவ்வேறு காரணங்களினாலே, வெளியிலே வசிக்கக் கூடிய ஜனங்களும், அந்த சங்கர ஜெயந்தி உற்சவத்தை நல்ல முறையிலே அவதாரக்கட்டம் படித்து, ஆச்சாரியார்களுடைய ஸ்தோத்திரங்களை எல்லாம் படித்து, காமாக்ஷி அம்மன் கோவிலிலே, காஞ்சிபுரத்திலே, சங்கர ஜெயந்தி அன்று ஆரம்பித்து, பௌர்ணமி வரையிலே, சௌந்தரியலஹரி உற்சவம் என்பதாக,

ஆச்சார்யாளுடைய உற்சவ விக்ரகம் புறப்பாடு செய்யப்பட்டு, அம்பாள் சந்நிதிக்கு வந்து, அந்த இடத்திலே ஒவ்வொரு ஸ்லோகமாக தினமும் பத்து ஸ்லோகங்கள் படிக்கப் பட்டு, அதாவது அம்பாள் சந்நிதியிலே ஆச்சார்யாள் சௌந்தர்யலஹரி சொல்லி பூஜிக்கக் கூடிய ஐதீகமாக, அந்த சௌந்தர்யலஹரி உற்சவம், சங்கர ஜெயந்தி ஜனனோ உற்சவமாக, ஜெயந்தியில் இருந்து ஆரம்பித்து நடத்துவது ஜனனோ உற்சவம். ஜெயந்தி அன்று நிறைவடையும் விதத்தினிலே, பூர்த்தி அடையும் விதத்தினிலே நடத்துவது கர்ப்போற்சவம். பாரத தேசத்திலே, பல க்ஷேத்திரங்களிலும் இதைக் கொண்டாடுகிறார்கள். எட்டாவது வருஷமாக, காஷ்மீர் ஸ்ரீநகரிலே, சங்கராச்சாரிய ஹில் என்கிற மலையிலே, மடத்தின் பக்தர்கள் சேர்ந்து, இந்த வருஷம் அதர்வ வேத பாராயணம் நடத்தி, அந்த சங்கர ஜெயந்தி உற்சவம், சில வருஷங்களுக்கு முன்பாக நம்முடைய பெரியவர்கள் அங்கு சென்று, அந்த சங்கர ஜெயந்தி உற்சவத்திலே, அந்த சங்கராச்சாரிய ஹில்லில் அபிஷேகம் செய்தார்கள்.

இப்படி இந்த சங்கர ஜெயந்தி உற்சவத்தை பக்தர்கள் அனைவரும், அவர் அவர்கள் வசிக்கக் கூடிய பகுதியிலோ, கோவில்களிலேயோ அல்லது இடங்களிலோ, ஆச்சார்யாள் நமக்குக் கொடுத்து இருக்கக் கூடிய பக்தி ஸ்தோத்திரங்களைப் படித்து, ப்ரவசனங்கள் ஏற்பாடு செய்து, எந்த விதத்திலே இந்த உற்சவத்தைக் கொண்டாடுவதற்கு அந்தப் பிரதேசத்திலே சௌகரியப்படுகிறதோ, அந்த விதத்திலே, இந்த ஆச்சார்யாளுடைய ஜெயந்தியைக் கொண்டாடி, அந்த ஆச்சார்யாளுடைய ஜெயந்தியைக் கொண்டாடுவது மூலமாக, சனாதன தர்மத்திலே, நம்முடைய ஸ்ரத்தையை மேன் மேலும் விருத்தி செய்து கொண்டு-ஏனென்றால், இன்றைக்கு நாம் செய்யக் கூடிய சனாதன தர்மத்தைப் பற்றிய அனைத்து விஷயங்களும்-சந்தியாவந்தனமாக இருக்கட்டும், வேத பாராயணமாக இருக்கட்டும், இஷ்டிகளாக இருக்கட்டும், ஸ்மார்த்த கர்மாக்களாக இருக்கட்டும், எல்லாமே, இந்த வேத மார்க்கத்தை, இந்த கலியுகத்திலே, ஸ்தாபிதம், அதாவது சந்தேகம் இல்லாத நிலையிலே, நல்ல முறையிலே பிரசாரம் செய்வதற்கு ஆச்சார்யாள் தான் காரணம்.

அதை நாம் உற்சவங்கள் கொண்டு கொண்டாடுவதற்கும், அந்த ஆச்சார்யாளுடைய பிரசாரம், உபதேசம் தான் காரணம். அந்த ஆச்சார்யாளுடைய ஜெயந்தியை நல்ல முறையிலே கொண்டாடி குரு பக்தியின் மூலமாக, மேன்மேலும் -**தீப மங்கள ஜோதி நமோ நம**- என்கிற விதத்திலே-ஞான தீபத்தின், ஞான தீபத்தின் வெளிச்சத்திலே நாம் மேன் மேலும் நம்முடைய வாழ்க்கையை, தார்மீக முறையிலே முன்னேற்றம் காணுவதற்கு அந்த ஆச்சார்யாள் பக்தியை மேன் மேலும் செய்ய வேண்டும்.

**ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர**

# ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்த்ரரின் கீர்த்தனைகள்

# सदासिव ब्रह्मेन्द्र कीतर्नाः

**खेलति मम हृदये राम: खेलति मम हृदये**

**मोहमहार्णवतारककारी रागद्वेषमुखासुरमारी (खेलति)**

**शान्तिविदेहसुतासहसारी दहरायोध्यानगरविहारी (खेलति)**

**फरमहम्ससाम्राज्योद्दारी सत्याग्यानानन्दशरीरी (खेलति)**

**கேலதி மம ஹ்ருதயே ராம: கேலதி மம ஹ்ருதயே**

**மோஹமஹார்னவ தரககாரீ ராகத்வேஷமுகாஸுரமாரீ (கேலதி)**

**சாந்தி விதேஹஸுதஸஹசாரீ தஹராயீத்யனகரவிஹாரீ (கேலதி)**

**பரமஹ்ம்ஸஸாம்ராஜ்யோத்தாரீ ஸத்யக்யானனதஸரீரீ (கேலதி)**

பொருள் : என் மனதில் விளையாடுகிறான் ராமன் என் மனதில் விளையாடுகிறான். மோகமென்னும் மாக்கடலைத் தாண்டுவிப்பவனும், விருப்பு, வெறுப்பு முதலிய அஸுரர்களை கொல்பவனுமான ராமன் (விளையாடுகிறான்).

மனச்சாந்தி என்னும் ஜனக குமாரியை மனைவியாகக் கொண்டவனும், இதயாகாசம் என்னும் அயோத்தியில் மகிழ்ந்திருப்பவனுமான ராமன் (விளையாடுகிறான்).

பரமஹம்ஸர்களின் ஸாம்ராஜ்யத்தை நிலை நிறுத்துகிறவனும், ஸத்யம், ஞானம், ஆனந்தம் என்பவற்றை தனக்குச் சரீரமாக கொண்டவனுமான ராமன் (விளையாடுகிறான்).

# ஸ்ரீ பாதஸப்ததி-4

ஸ்ரீ மேல்பத்தூர் நாராயண பட்டத்ரி இயற்றியது

பி. ஆர். கண்ணன்

**கோரம்பாதயூஸஹஸ்ரகம் ப்ரகடயந்நாஸாஸு பாஸாம்பதிர்-**
**த்வாந்தம்நோ புநராந்தரம் ஸமயிதும் ஸக்நோதி ஸைலாத்மஜே ।**
**த்வத்பாதத்விதயேந கோமலதரேணாநேந சேத: ஸ்ப்ருஸா**
**ஜந்தூநாம் பயூஹிரந்தரந்ததமஸம் க்ரு'ந்தஸ்யநந்தம் ஸிவே ॥ 10 ॥**

10. ''ஹிமவான் புத்ரியே! ஒளிமிகுந்த சூரியன், தனது சக்தி வாய்ந்த பிரகாசிக்கும் கதிர்களை ஆயிரக்கணக்கில் வெவ்வேறு திசைகளில் பரப்பினாலும், உயிரினங்களின் அக இருளை (அறியாமை - அவித்யை) அகற்ற முடியவில்லை. ஆனால் உங்கள் மிகவும் மென்மையான (தாமரை) பாதங்கள் மனதின் அடிப்பகுதியைத் தொடுவதால், உயிரினங்களில் இருக்கும் பயங்கரமான வெளிப்புற மற்றும் உள் இருளை நீங்கள் வேரறுக்கிறீர்கள். '

உயிரினங்களில் உள்ள வெளிப்புற இருள் என்பது உடல், மனம் மற்றும் புத்தியுடன் தன் ஆத்மாவைத் தொடர்புபடுத்தும் போக்கு, உலகத்தின் விஷயங்களைத் தன் ஆத்மாவிலிருந்து வேறுபட்டதாகப் பார்ப்பது, மற்றும் அவற்றின் மீது பற்றுதலை வளர்ப்பது முதலியன. அக இருள் என்பது தேவியின் பாதங்களை தன் ஆத்மாவாக, ஒளி, புத்தி, செயல் மற்றும் இன்பம் அனைத்திற்கும் ஆதாரமாக பார்க்க இயலாமை. தேவியின் பாதங்களில் பிரார்த்தனை செய்வதன் மூலம் பக்தனுக்கு ஆத்ம ஞானம் கிட்டும்.

ஸௌந்தர்யலஹரியில் ஆதி சங்கரர் கூறுகிறார்:-

**''அவித்யானாம் அந்தஸ்திமிர மிஹிர-த்வீபநகரி**
**ஜடானாம் சைதன்ய-ஸ்தபக மகரந்த ஸ்ருதிஜரி'' । (3)**

''தேவி ! உனது ஸ்ரீபாததூளி, சூரியனின் உதயத்தீவின் நகரத்தைப் போன்றது, இது பக்தர்களின் அவித்யையின் அடர்த்தியான, இருண்ட உள்வெளியை விரட்டுகிறது. அறிவில்லாதவர்களுக்கு இது ஆத்மஞானமாகிய கல்பக மரத்தின் பூக்களிலிருந்து பரவும் மகரந்தம் போன்றது.

**ஸுர்யேந்த்வக்நிஸமீரணாதிஸகலஸ்வர்வாஸிநாமுந்மத:**

**ஸர்வாண்யேவ பதாநி யோ மதியுதவாந் துர்வாரஸெர்யோஷ்மணா ।**

**தம் கோரம் மஹிஷாஸுரம் நிஜபதேநைகேந ஸம்ம்ரு'த்நதீ**

**யத்த்வம் ப்ரத்யக்ரு'தாயுஸ்தத: கிமபரம் த்வத்வைப4வம் ப்ரூமஹே ॥ 11 ॥**

11. ''தேவி, மகிஷாசுரன், ஸ்வர்க்க லோகத்தில் வசித்த சூரியன், அக்னி, வாயு மற்றும் பிற தேவர்களைத் தன் அசாத்திய வீரத்தின் பலத்தால் அவர்கள் ஸ்தானத்திலிருந்து விரட்டினான். உன்னுடைய ஒரே ஒரு பாதத்தைப் பயன்படுத்தி இவ்வளவு பயங்கரமான அசுரனை வென்று அவனுடைய தவறுக்குப் பழிவாங்கினாய். இதைவிட உங்களின் வேறு எந்தப் பெருமையைப் பற்றி நாங்கள் பேச வேண்டும்?''

தேவர்களின் 'பதம்' என்பது அவர்களின் ஸ்தானம் மட்டுமல்ல, அவர்களின் இருக்குமிடம், கல்பக மரம் போன்ற அவர்களின் இன்பம் மற்றும் பிரபஞ்ச நிலைப்பாட்டையும் கூட குறிக்கிறது. இவை அனைத்தும் மகிஷாசுரனால் அடையாளம் காண முடியாத அளவிற்கு நீக்கப்பட்டு மாற்றப்பட்டன. இந்த ஸ்லோகம் தேவர்களாகிய பக்தர்களின் எதிரிகளை விரைவாக அகற்றுவதில் தேவியின் ஆர்வத்தையும், சர்வ வல்லமையுள்ளவளாக இருப்பதால், அவள் அதைச் சுலபமாகச் செயல்படுத்துவதையும் வெளிப்படுத்துகிறது.

துர்கா ஸப்தஸதியில், மகிஷாசுரன் என்ற அரக்கனைக் கொன்ற பிறகு, தேவியைப் புகழ்ந்து தேவர்கள் கூறுகிறார்கள்:

**''கேனோபமா பவது தேஸ்ய பராக்கிரமஸ்ய ''।** (4:22)

'உங்கள் வீரத்துடன் எதை ஒப்பிடுவது?'

**ஏகம் வாமதயைவ, தக்ஷிணதயைவாந்யத்பதம் தேஹிநாம்**

**க்யுயாதம் முக்திபுராதி4வாஸிநி ஸிவே சித்ரம் த்வயி த்வீத்ருஸம் ।**

**ஆநம்ரேஷு ஜநேஷ்வபீஷ்டகரணே பாதாவுபௌதக்ஷிணா-**

**வாநம்ரே து க்ரு'தாகஸி ஸ்மரஹரே வாமாவுபௌ ॥ 12 ॥**

12. ''முக்திபுர நிவாசினியே! மங்களகரமான தேவி! ஒவ்வொருவருக்கும் இரண்டு பாதங்கள் உள்ளன, ஒன்று வலது (தக்ஷிணா) மற்றும் மற்றொன்று இடது (வாமா) என்பது அனைவரும் அறிந்ததே, ஆனால் தங்கள் விஷயத்தில் அது விசித்திரமானது.

அழகிய கண்களை உடைய தேவி! பக்தர்கள் நமஸ்காரம் செய்யும் போது, உங்கள் இரு பாதங்களும் தக்ஷிணையாகின்றன, அதாவது அவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் வல்லமை வாய்ந்தவை. ஆனால், மன்மதனை அழித்தவரான சிவன், ஏதோ ஒரு போலிக் குற்றத்திற்கு (ப்ரியம் காரணமாக) பிராயச்சித்தம் செய்வதற்காக ஸாஷ்டாங்கமாக வணங்கும் போது, உங்கள் இரு பாதங்களும் வாமமாக, அதாவது வக்கிரமாக ஆகி, அவரது விருப்பத்தை வழங்க விரும்பவில்லை.'

வார்த்தைகள் - வாமம் மற்றும் தக்ஷிணம் ஆகியவற்றில் அழகான சிலேடை மூலமாக தேவியின் பக்தர்கள்பால் உள்ள அருளை வெளிப்படுத்துகிறார் கவிஞர்.

மூகபஞ்சசதியில் மூககவி கூறுகிறார்:

**''அசுலப-ப்ரதானாத் தீனானம் அமரதரு தௌர்பாக்ய-ஜனனீம்''** । (2:60)

'தேவியின் பாதங்கள் ஏழை பக்தர்களுக்கு அவர்களின் கற்பனைக்கு அப்பாற்பட்டவற்றை வழங்குகின்றன, இதனால் சுவர்க்கத்திலுள்ள கல்பக மரத்திற்கு அவப்பெயரை உண்டு பண்ணுகின்றன.'

**ஆநம்ரஸ்ய புரத்ருஹ: ஸிரஸி தே பாதாப்ஜபாத: ஸிவே**
**ஜீயாத்யேந பபூவ பங்கஜவதீ மௌலிஸ்ரவந்தீ க்ஷணம் ।**
**கிஞ்சோதஞ்சிதபாலபல்லவவதீ ஜாதா ஜடாவல்லரீ**
**லாக்ஷாபாதவஸேந ஸாந்த்யஸுஷமா ஸாந்த்யூரா ச சாந்த்ரீ கலா** । 13

13. '' தேவி! திரிபுரங்களை அழித்தவரான சிவன் உன் பாதங்களில் பணிந்து நிற்கும் போது (ப்ரியத்தில் அவர் செய்த போலித் தவறு காரணமாக) உன் பாதங்கள் அவர் தலையில் மோதின. இந்த காட்சி வாழ்க! சிவனின் தலையில் உள்ள கங்கை ஒரு நொடி (சிவப்பு) தாமரையால் (பாதத்தினால்) அலங்கரிக்கப்பட்டது. அவரது தலையில் (பொதுவாக வறண்டு இருக்கும்) ஜடாமுடிகள் மென்மையான தளிர்களுடன் (உங்கள் தாமரை பாதங்களின் விரல்கள்) ஜொலித்தன. (உங்கள் பாதங்களின்) செம்பஞ்சுக்குழம்பின் சிவப்பு நிறத்தின் பின்னணியில் அந்தி சாயும் நேரத்தை விட பிறை நிலவு அதிக பிரகாசத்துடன் பிரகாசித்தது.'

தேவியின் தெய்வீக விளையாட்டு எப்போதும் அழகானதே.

மூகபஞ்சசதி கூறுகிறது:

**''யயோ: ஸந்த்யாம் ரோசி: ஸததம் அருணிம்நே ஸ்ப்ருஹயதே**

**யயோ: - சாந்திரீ காந்தி: பரிபததி த்ருஷ்ட்வா நக-ருசிம்''** । (2:23)

'மாலை சிவப்பு ஒளி எப்போதும் உங்கள் சிவப்பு பாதங்களின் பிரகாசத்திற்காக ஏங்குகிறது. உங்கள் கால்களில் உள்ள நகங்களின் சிறப்பைக் கண்டு சந்திரனின் பிரகாசம் மங்குகிறது.'

**த்ருஷ்ட்வா ராத்ரிஷு சந்த்ரபாதஜநிதாம் பாதோயுருஹாணாம் வ்யதாம்**

**தேவி த்வம் கருணாகுலேவ குருஷே தத்வைரநிர்யாதநம் ।**

**மாநாநம்ரமஹேஸமௌலிவலபீவாஸஸ்ய ஸீதத்விஷோ**

**நித்யம் பங்கஜபாதகாதஜநிதா பாதா யதாதீயதே ॥ 14**

14. ''தேவி! இரவு நேரங்களில், சந்திரனின் கதிர்களால் தாமரை மலர்கள் பாதிக்கப்படுகின்றன. தாமரையின் மீது இரக்கம் கொண்டு, சிவன் ஸாஷ்டாங்கமாக வணங்கும் போது (அன்பான சண்டைக்குப் பிறகு உங்களைச் சமாதானப்படுத்துவதற்காக) சந்திரனைப் பழிவாங்குகிறீர்கள். சிவபெருமானின் தலையில் வாழும் சந்திரன், உனது தாமரை அடிகளின் தாக்குதலால் துன்பப்படுகிறான்.

மூககவி மூகபஞ்சசதியில் தேவியின் பாதங்களின் பெருமையை அனுபவிக்கிறார்:

**''தவ த்ரஸ்தம் பதாத் கிஸலயம் அரண்யாந்தரம் அகாத்**

**பரம் ரேகாரூபம் கமலம் அமுமேவாஸ்ரிதம் அபூத் ।**

**ஜிதாநாம் காமாக்ஷி த்விதயமபி யுக்தம் பரிபவே**

**விதேஸே வாஸோவா சரணகமநம் வா நிஜரிபோ:''** (2:85) ॥

''காமாக்ஷி! உமது பாதங்களுக்குப் பயந்து (தாவரங்களின்) ம்ருதுவான தளிர் காட்டிற்குச் சென்றது; தாமரை மலர் ரேகா (வரிகள்) வடிவில் உங்கள் பாதங்களில் தஞ்சம் அடைந்தது. தோற்கடிக்கப்பட்ட நபர்கள் அவமானப்படும் போது, அவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது அல்லது தங்கள் சொந்த எதிரியிடம் தஞ்சம் அடைவதே பொருத்தமானது.

(தொடரும்)

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

*ஓம் காலகாரணவிதே வேதாந்தபாஸ்கராய நம:*

**ஸ ஏவ காரணம் சாஸ்ய காலாதே: ஜகத: பர: ।**

**தமேவ ப்ரஹ்ம ஜானீயாத் இதி வேதாந்தபாஸ்கர: ।।**

இந்த காலதேச ரூபமாகிய ஜகத்திற்குக் காரணமாகியிருக்கக் கூடிய அந்த பரமாத்மாவையே பரப்பிரம்மம் என்று அறிய வேண்டும்.

## 36. ஆத்மா காலத்திற்கும் காரணன்

**ய: காரணானி நிகிலானி தானி காலாத்மயுக்தானி அதிதிஷ்டத்யேக: ।**

**ச்வேதாச்வதரோபநிஷத் 1-3**

***எந்த பரமாத்மா, காலத்திலிருந்து ஆரம்பித்து ஆத்மா வரையிலும், சகல வஸ்துகளையும் ஆள்கிறானோ அவன் தான் இந்த ஜகத்திற்குக் காரணமானவன்.***

பரமாத்மாவே ஜகத்திற்குக் காரணன். பரமாத்மாவே இந்த ஜகத்தை நியமித்திருக்கிறான். இந்த பரமாத்மா ஒருவனே சர்வ தந்த்ர ஸ்வதந்திரன். அவனே எல்லோரையும் ஆள்கிறான். அவன் ஒருவனே இந்த விச்வத்திற்கு அரசன். பரப்பிரம்மமே இந்த ஜகத்திற்கு உபாதானமும், நிமித்தமும் ஆகியிருக்கிறது.

காலம், தேசம், சுபாவம், கர்மம், நியமம், பிரக்ருதி, ஜீவர்கள், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், தேவதைகள் - இந்த எல்லாவற்றிற்கும் பரமாத்மா ஒருவனே காரண கர்த்தனும், ஆளக்கூடியவனும் ஆகிறான். பரப்பிரம்மத்தின் ஸாந்நித்தியத்தினாலே, இந்த உலகம் முறையோடு நடக்கிறது. இந்த இரகசியத்தைத் தியான யோகத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். தேசகாலங்கள் இந்த உலகத்தின் உள்ளேயே அடங்கி உள்ளன. நாம் தியான யோகத்தின் மூலமாக பகவானை ஆராதித்து, அவர் அனுக்ரஹத்தின் மூலமாக அவரை அறிந்து அருள் பெறுவோமாக.

।। ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।

# வேத ஸூக்தங்கள்

## வருணன் அதர்வ வேதம் காண்டம் 4 - 118

### ஜைமினி

மனிதர்களுக்கு அவரவர் மனச்சான்றே சான்றாக உள்ளது. எனவே உள்ளுணர்வாகிய சான்றை அவமதிக்காதே. செய்யும் பாவத்தை யாரும் காணவில்லை என்று பாவிகள் தம்மை ஸமாதனப்படுத்திக் கொள்கின்றனர். உண்மையில் அவர்களை மேற்சொன்ன தேவர்களும் அவர்களின் மனச்சான்றும் பார்த்துக் கொண்டே இருக்கின்றனர்,

வான், மண், காற்று, நீர், மனம், சூரியன், சந்த்ரன், தீ, யமன், இரவு, அந்தி, சந்திகள் அறம் இவர்கள் மனிதரின் எல்லா செயல்களையும் அறிவர். (மனு ஸ்ம்ருதி )

இந்த ஸ்ம்ருதி வாக்யத்திற்கு நாம் படிக்கப் போகும் வருண ஸூக்தம் அடிப்படை.

தமிழ் நாட்டில் கடலைச் சார்ந்த நெய்தல் நிலத்திற்கு அதிபதி வருணன். வேதக் கடவுளாகிய அவன் எல்லாரையும் ஆள்பவன். தவறு செய்பவனை தண்டிப்பவன். கையில் உள்ள பாசத்தால் தவறு செய்பவனைப் பிடித்து ஒறுப்பவன்.

பொதுவாகவே மக்கள் தவறு என்று தெரிந்தாலும் யாரும் பார்க்கவில்லை என்னும் தைர்யத்தால் மேலும் மேலும் தவறு இழைக்கின்றனர். துன்பத்தில் ஆழ்கின்றனர்.

ஆக ஒரு கடவுள் இருப்பதால் தவறு இழைக்க அச்சப்படுவர். **'அச்சமே கீழ்களது ஆசாரம்'** என்பார் வள்ளுவர். இந்த அச்சம் இருந்தால் தான் குற்றங்கள் பெரிய அளவில் நடக்காமல் இருக்கும். இனி ஸூக்தத்தைப் படிப்போம்.

''பெரிய அதிகாரி அருகிலிருப்பது போல் அவன் (வருணன்) பார்க்கிறான். எவன் ரகசியத்தில் செல்வதாக நினைத்தாலும் தேவர்கள் அவனை அறிவார்கள். 1

ஒருவன் செல்வது நிற்பது கோணலாய் போவது, மறைந்து நிகழ்வது எதிர்ப்பது இருவர் உட்கார்ந்து ரகசியம் மொழிவது இவை அனைத்தையும் வருணன் மூன்றாவதாக அறிகிறான். 2

இந்தப் பூமியும் பெரிய வரம்புள்ள அச்சோதியும் அரசனான வருணனதாகும். இரண்டு கடல்களும் வருணனுடையது. அவனே நீர்த்துளியிலும் இருக்கிறான். 3

ஒருவன் ஜோதிக்கப்பால் நகர்ந்து சென்றாலும் வருணன் ஆணையினின்றி விடுதலையாவதில்லை. அவன் ஒற்றர்கள் இங்கு வருகிறார்கள். ஆயிரம் கண்கள் உள்ளவர்களாய் இப்புவியை காண்கிறார்கள். 4

ராஜாவான வருணன் வான் சோதிக்கும் அப்பால் உள்ளவற்றையும் நோக்குகிறான். மனிதர்களின் கண் சிமிட்டல்களையும் எண்ணியுள்ளான். சூதாடுபவன் காய்களைப் போல் இவற்றை அளந்து வைக்கிறான். 5.

வருணனே ! ஏழாய் ஏழாய் முப்பிரிவாய் உன் பாசங்கள் நிலைத்துள்ளனவோ, அவை அனைத்தும் பொய் கூறுபவர்களைப் பற்றட்டும். ஸத்யம் பேசுபவர்களை அவன் விட்டு விடட்டும். 6.

வருணனே! நூறு பாசங்களால் அசாத்யமானவர்களைக் கட்டு. உடைந்துள்ள பந்தமற்ற கோசம் போல் பாதகன் தொங்கும் உதரத்துடன் உட்காரட்டும். 7.

வருணன் நீளமாயும், குறுக்காகவும் உள்ளவன். அவனே சுதேசி. அவனே விதேசி. அவனே தைவம். அவனே மனுஷன். 8.

நாம் முன் சொன்னது போல் வருணன் எங்கும் தேவதை. எங்கும் உள்ளது. அனைத்தையும் பார்க்கிறது. கடல்களில் இருந்தாலும் அவைகளின் நீர்த்துளியிலும் அவன் உள்ளான். என்பது நல்ல ராஸிக்யம்.

இதைப் படிப்பவர்கள் தவறு செய்யமாட்டார்கள் என்று நம்புவோம்.

(தொடரும்)



**இனிய**
**"விஸ்வாவஸு"**
**தமிழ் புத்தாண்டு**
**நல்வாழ்த்துக்கள்**



ப்ரதீபப் பேழை

# ஆஹார சுத்தம்

ஒருவனை ஸாத்விகன் என்று சொல்கிறோம். அதன் அர்த்தமென்ன? ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று குணங்கள் மூவகைப்படும். அதில் ஸத்வகுணம் மேலிட்டு, மற்ற ரஜோ தமஸ்கள் குறைந்திருந்தால் அவனை ஸாத்விகன் என்று சொல்கிறோம். ஸத்வ குணம் மேலிட்டால் தான் மனிதன் தன் உயர்வைத் தேடிக் கொள்ள முடியும். இதற்கு ஆகார சுத்தம் அவச்யம் என்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. பொதுவாக ஆகாரமென்றால் ஜிஹ்வேந்திரியத்திற்கு விஷயமான அன்னபானாதிகளைத் தான் கொள்வது வழக்கம். முறையில்லாததும், தோஷமுள்ளதும், ஆசாரமற்றதுமான போஜனங்கள் நிஷித்தமாகச் சொல்லப்படுகின்றன. ஸத்வ ப்ராதனமாகவும் ஆகாது. இதற்கு மாறுதலாக உட்கொள்பவனுக்கு, அவனிடத்திலிருக்கும் ஸத்வகுணம் குறைவதுடன், ராஜஸ, தாமஸ குணங்களின் அபிவிருத்திக்குத்தான் காரணமாகும். சாஸ்திரங்களில் பஞ்ச இந்திரியங்களுக்கும் அதனதன் விஷயங்களை ஆதாரமாகச் சொல்வதுண்டு. ஆகவே இந்திரியங்கள் தன்னிஷ்டப்படி தன் விஷயங்களில் ஈடுபடாமல் சுத்தியுடனிருந்தால் ஸத்வகுணம் மேலிடும் என்கிறது.

**ஆஹார சுத்தௌ ஸத்வசுத்தி:**

சுருதியும் கோஷிக்கிறது. ஸாதாணமாகக் கெடுதலான ஆகாரத்தினாலும் கெட்டவர்களுடைய ஆஹாரத்தினாலும் மனோ நிலைமை எவ்வளவு மாறுதலை அடையக் கூடுமென்பதை இந்த உதாரணம் தெளிவாக்குகிறது

ஒரு மஹாராஜாவுக்கு மஹாத்மாவான ஒரு குரு இருந்தார். அவர் அடிக்கடி அரண்மனைக்குப் போவார். அரசருக்கு உபதேசங்கள் செய்வார். வழக்கம்போல் ஒருநாள் அரண்மனைக்குப் போனார். அங்கேயே அரசர் விருப்பப்படி விருந்துண்டார். வெயில் வேளையாதலால் சற்று இளப்பாறப் படுத்துக் கொண்டார். அச்சமயம் அவர் இருந்த அறையில் எவரும் இல்லை. பக்கத்துச் சுவரில் ராஜாவின் விலையுயர்ந்த முத்துமாலை தொங்கிக் கொண்டிருந்தது. எக்காரணத்தாலோ மஹாத்மாவுக்கு அதைப்

பார்த்ததும் மனத்தில் கெட்ட எண்ணம் உண்டாயிற்று. மாலையை எடுத்துப் பைக்குள் போட்டுக் கொண்டார். பிறகு தன் ஆசிரமத்துக்குப் போய் விட்டார்.

சற்று நேரம் கழித்து அரண்மனையில் முத்துமாலை களவு போய்விட்டதென்று பரபரப்பு ஏற்பட்டது. எங்கும் தேடினார்கள். வேலைக்காரர்களை அடித்துக் கேட்க ஆரம்பித்தார்கள். ஆனால். அவ்வேலைக்காரர்களுக்கு முத்துமாலையைப் பற்றி என்ன தெரியும்? பழி ஓரிடம், பாவம் ஓரிடம். ஆனால் ராஜகுருவான மஹாத்மாவைப் பற்றி யாருக்கும் ஸந்தேகம் ஏற்படவில்லை. இப்படி இருபத்தி நான்கு மணி நேரம் கழிந்து விட்டது.

மஹாத்மாவின் மனம் தெளிய ஆரம்பித்தது. கெட்ட எண்ணங்கள் விலகிப் போய் விட்டன. அவர் உடனே முத்துமாலையை எடுத்துக் கொண்டு அரண்மனைக்குப் போனார். அரசன் எதிரில் மாலையை வைத்தார். நான் இந்த மாலையைத் திருடி எடுத்துப் போனேன். எக்காரணத்தாலோ நேற்று என் புத்தி கெட்டிருந்தது. இன்று இந்நேரம் வரையில் புத்தியின் மயக்கம் தெளியவில்லை. இப்பொழுதுதான் நான் செய்த தவறு எனக்குத் தெரிய வந்தது. நான் திருடன். இங்கு அது தெரியாமல் வேலைக்காரர்களைக் கண்டித்திருப்பீர்களென்பதை நினைக்கும் போது தான் எனக்குத் துக்கமாக இருக்கிறது என்று மஹாத்மா கூறினார்.

அதற்கு அரசன் சிரித்துக் கொண்டே பதில் சொன்னான்: 'தாங்கள் சொல்வது எக்காலத்திலும் நடக்கக்கூடிய விஷயமில்லை. ஒருகால் முத்து மாலையைத் திருடினவன் தங்களைச் சரணாகதி செய்து தாங்கள் தான் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித்திருப்பான். தாங்களோ மஹா தயாளு. திருடனுக்கு தஞ்சம் கொடுத்து அவனைக் காப்பாற்ற விரும்பியிருப்பீர்கள். குற்றத்தைத் தானே செய்ததாக ஒத்துக் கொண்டாவது அவனைக் காப்பாற்ற விரும்புகிறீர்கள் போலும் என்றான் அரசன்.

மஹாத்மா எவ்வளவோ மன்றாடி நான் தான் திருடன், நான் பொய் பேசவில்லை என்றெல்லாம் சொல்லி, மேலும், நான் வைராக்கியத்தை அடைந்தவன் தான். எனக்கு ஒரு வஸ்துவின் பேரிலும் ஆசை கிடையாது. இப்படியெல்லாம் இருந்தும், எப்படி இம் முத்து மாலையைத் திருட வேண்டுமென்ற துர்எண்ணம் உண்டாயிற்று என்று எனக்குப் புரியவில்லை. வெகுநேரம் ஆலோசித்துப் பார்த்ததும் நான் இப்படிப்பட்ட மஹா பாவத்தைச் செய்ததற்குக் காரணம் ஒன்றும் புலப்படவில்லை. ஆம், இப்பொழுது கொஞ்சம் புலப்படுகிறது. நேற்று என்னை அரண்மனையில் சாப்பிட வேண்டுமென்று நிர்ப்பந்தித்தீர்கள், சாப்பிட்டேன். பிறகு மஹா பாபகரமான திருட்டைச் செய்தேன்.

ஆசிரமத்துக்குப் போனதும் பிறகு தூக்கம் பிடிக்கவில்லை. காலை முதல் இதுவரையில் 5 தடவை அதிஸாரம் போல் பேதியாகி விட்டது. அதன் பிறகு தான் நான் செய்த தவறு எனக்குப் புலப்பட்டது. தங்கள் முன்வந்து மாலையை வைத்து விட்டுக் குற்றத்தை ஒப்புக் கொண்டேன். இவைகளையெல்லாம் ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால் நேற்று நான் அரண்மனையில் சாப்பிட்ட அன்னத்தில் ஏதோ தோஷம் இருந்திருக்க வேண்டும். அந்த அன்ன தோஷத்தால் என் மனத்தில் கெட்ட எண்ணம் உண்டாகி மாலையைத் திருடி இருக்க வேண்டும். இன்று தெய்வ ஸங்கல்பத்தால் பேதியாகி அந்த தோஷமுள்ள அன்னம் வெளியானதும் மனம் தெளிந்து இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. தாங்கள் எல்லாவற்றிற்கும் நேற்று எனக்குச் சமைத்த அரிசி எங்கிருந்து வந்தது முதலிய விவரங்களை விசாரித்துப் பாருங்கள் என்று சொன்னார்.

உடனே மஹாராஜா மணியக்காரருக்குத் தாக்கீது அனுப்பினார். நேற்று அரண்மனையில் மஹாத்மாவுக்குச் சமைத்த அரிசி எவ்வகைப்பட்டது ? எங்கிருந்து வந்தது முதலிய விவரங்களை விசாரித்துச் சொல்ல வேண்டுமென்பது அரசர் உத்தரவு. மணியக்காரர். பூரா விவரங்களையும் விசாரித்துத் தெரிவித்ததாவது நம் ராஜ்யத்தில் ஒரு பெரிய கொள்ளைக்காரன் கடைத்தெருவிலிருந்து உயர்ந்த அரிசியைத் திருடிவிட்டான். அத் திருட்டு வெளிப்பட்டு திருடன் தண்டிக்கப்பட்டான். ஆனால் அரிசிக்குச் சொந்தக்காரன் அரிசியைப் பெற்றுக் கொண்டு போக ஆஜராகவில்லை. ஆகையால் அந்த அரிசி பறிமுதல் செய்யப்பட்டு அரண்மனைப் பண்டகசாலையில் சேர்க்கப்பட்டு விட்டது. உயர்ந்த அரிசியானதால் மஹாத்மாவுக்குத் தயாரிக்கப்பட்டது. இவைதான் விவரங்கள் என்று அவர் தெரிவித்தார்.

இவையனைத்தையும் அறிந்தபின் மஹாத்மா சொன்னதாவது : இதற்காகத்தான் சாஸ்திரத்தில் அரசர்களின் அன்னம் சாப்பிடக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது. எப்படி வியாதியின் அணுக்கள் சரீரத்தில் பரவி வியாதியை விருத்தி செய்கின்றனவோ, அதேபோலக் கெட்ட கார்யத்தால் ஏற்பட்ட மானஸிக பரமாணுக்கள் ஏதாவது ஒரு வஸ்துவுடன் உள்சென்றால் மனத்தையும் கெடுத்து விடும். திருட்டின் பரமாணுக்கள் அந்த அரிசியில் ஒட்டிக் கொண்டிருந்தன. அதனால் என் மனம் கெட்டு விட்டது. நேற்று பகவத் ஸங்கல்பத்தால் அக் குற்றபரமாணுக்கள் வெளியானதும் என் மனமும் தெளிவடைந்து விட்டது. ஆதலால் சுத்தமாயிருக்க **ஆஹாரசுத்தி** அவசியம் எனப் போதித்தார்.

(தொடரும்)

# சித்திரை மாத ஸ்ரீ மடத்தின் விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 14-04-2025 | திங்கள் | ஸ்வாதி தேர் — ஸ்வாதி வேத பாராயணம் |
| 16-04-2025 | புதன் | அனுஷம் தேர் — அனுஷம் வேத பாராயணம் |
| 18-04-2025 | வெள்ளி | மூலம் தேர் — ஸ்ரீ வராஹ ஜயந்தீ மூலம் வேத பாராயணம் |
| 20-04-2025 | ஞாயிறு | உத்ராடம் தேர் |
| 21-04-2025 | திங்கள் | உத்ராடம் வேத பாராயணம் |
| 22-04-2025 | செவ்வாய் | அவிட்டம் தேர் — நடராஜர் அபிஷேகம் |
| 23-04-2025 | புதன் | அவிட்டம் — வேத பாராயணம் |
| 24-04-2025 | வியாழன் | ஏகாதசி |
| 25-04-2025 | வெள்ளி | த்வாதசி — ப்ரதோஷ பூஜை — ஸ்ரீ மத்ஸ்ய ஜயந்தீ |
| 30-04-2025 | புதன் | ஸ்ரீ அக்ஷய த்ரிதீயை — ஸ்ரீ பலராம ஜயந்தீ |
| 02-05-2025 | வெள்ளி | ஸ்ரீ ஸங்கர ஜயந்தீ — ஸ்ரீ ராமானுஜ ஜயந்தீ |
| 07-05-2025 | புதன் | 2501-ம் வருஷ பகவத்பாதாள் ஆராதனை |
| 08-05-2025 | வியாழன் | ஏகாதசி |
| 09-05-2025 | வெள்ளி | த்வாதசி — ப்ரதோஷ பூஜை |
| 11-05-2025 | ஞாயிறு | ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தீ — பௌணர்மி பூஜை |
| 12-05-2025 | திங்கள் | ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடம் மூலாம்னாய ப்ரதிஷ்டாபன தினம் |
| 18-04-2025 ; 25-04-2025 02-05-2025 ; 09-05-2025<br>வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி சமேத ஸ்ரீசந்த்ரமௌலீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை | | |

# அநுகீதாபர்வம்

## (இருபதாவது அத்தியாயம்)

(ஸித்தர் மோக்ஷ ஸாதன முதலியவற்றைக் காஸ்யபருக்குக் கூறியது)

எவன் ஏகாந்த ஸ்தலத்தில் உட்கார்ந்து கொண்டு பேசாமலும் ஒன்றையும் ஆலோசியாமலும் முன்முன் உள்ளதை விடுகிறானோ, அவன் கர்மமற்றவனாவான். எல்லாரையும் மித்திரராகக் கொண்டவனும், எல்லாவற்றையும் ஸஹிப்பவனும் சித்தத்தை அடக்குவதில் பற்றுதலுள்ளவனும், இந்திரியங்களை வென்றவனும், பயமும் கோபம் அற்றவனும், காமம் அற்றவனுமான மனிதன் வீடு பெறுவான். எவன் எல்லாப் பிராணிகளிடத்திலும், தன்னிடத்திற்போல நடந்து கொள்பவனும், அடக்கமுள்ளவனும், சுத்தனும் எப்பொழுதுமே நீதி தவறாமல் நடப்பவனும், இந்திரியங்களை அடக்கினவனும், கர்வமும், அபிமானமும் அற்றவனுமாயிருக்கிறானோ அவன் எல்லாவற்றிலிருந்தும் விடுதலை அடைந்தவனே. எவன் ஜீவித்திருப்பதிலும், மரிப்பதிலும், ஸுகத்திலும், துக்கத்திலும், லாபத்திலும், அலாபத்திலும் நண்பனிடத்திலும், பகைவனிடத்திலும் ஸமமாக இருக்கிறானோ அவன் விடுதலை அடைகிறான். ஒன்றையும் விரும்பாதவனும், ஒன்றையும் அவமதியாதவனும், துவந்துவமற்றவனும், ஆசையற்ற மனமுள்ளவனுமாக இருப்பவன் எவ்வகையிலும் முக்தனே.

பகைவரும், உறவினரும் மக்களும் இல்லாதவனும், அறம், பொருளின் பந்தங்களை விட்டவனும் ஓரிடத்திலும், பற்றில்லாதவனுமாக இருப்பவன் விடுதலையடைகிறான். எவன் தர்மமும், அதர்மமும் அற்றவனும் ப்ராரப்த கர்மாவை (அனுபவித்து) அழித்தவனும், தாதுக்கள் குறைந்தவனும், நன்கு அடங்கின மனமுள்ளவனும் துவந்துவமற்றவனுமாக இருக்கிறானோ அவன் விடுதலை அடைகிறான். கர்மங்களும், ஆசையுமற்றவனும், உலகத்தை நிலையற்றதும் தன் நிலைமையிலிராததும், எப்பொழுதும் தன்வசமற்றதும், பிறப்பும், மூப்பும், மரணமுள்ளதுமாகப் பார்ப்பவனும் எப்பொழுதும் வைராக்யமுள்ள புத்தியுள்ளவனும், தன்னிடத்திலுள்ள தோஷங்களை நன்றாகப் பார்ப்பவனுமாக இருப்பவன் சீக்கிரத்தில் ஆத்மாவைப் பந்தத்தினின்றும் விடுபட்டதாகச் செய்கிறான்.

கந்தமும், ரஸமும், ஸ்பர்சமும், சப்தமும், பந்தமும், ரூபமும் அற்றதும் (எளிதில்) அறிய முடியாததுமான ஆத்மாவைக் கண்டவன் மோக்ஷம் அடைகிறான். எவன் ஐந்து பூதங்களின் குணங்களும் (ஸூக்ஷ்ம) சரீரமும், பற்றுதலும் குணங்களும் இல்லாததும்

குணங்களை அனுபவிப்பதுமான ஆத்மாவைப் பார்க்கிறானோ அவன் மோக்ஷம் அடைகிறான். எவன் சரீரத்தாலும், மனத்தாலும் உண்டான எல்லா ஸங்கல்பங்களையும் புத்தியினால் விலக்கி விறகற்ற அக்னி போல மெல்லச் சாந்தியை அடைந்தவனும், எல்லா ஸம்ஸ்காரங்களும் துவந்துவங்களும் பந்தமுமற்றவனுமாகி இந்திரிய ஸமூகத்தைத் தவத்தில் செலுத்துகிறானோ அவன் முக்தனே.

எல்லா ஸம்ஸ்காரங்களாலும் விடப்பட்டவன் பிறகு ஸனாதனமும் மேலானதும் மிக்க சாந்தமானதும், அசைவற்றதும், நித்தியமானதும், அழிவற்றதுமான பிரம்மத்தை அடைகிறான். உலகத்தில் யோகிகள் எதனை அறிந்து தம்மை ஸித்தர்களாகப் பார்க்கிறார்களோ மிகச்சிறந்ததான அந்த யோக சாஸ்திரத்தை இனிமேல் சொல்லுகிறேன். எந்த யோகங்களால் எப்பொழுதும் தியானம் செய்பவன் ஆத்மாவைத் தன்னிடத்தில் பார்க்கிறானோ அவற்றின் உபதேசத்தைச் சொல்லுகிறேன். அதனை உள்ளபடி என்னிடமிருந்து தெரிந்து கொள். இந்திரியங்களை (விஷயங்களிலிருந்து) திருப்பி மனத்தை ஆத்மாவினிடத்தில் நிலை நிறுத்த வேண்டும். முந்திக் கடுந்தவம் புரிந்து பிறகு மோக்ஷ யோகத்தை அனுஷ்டிக்க வேண்டும். தவம் செய்பவனும், நித்யமான வஸ்துவை அடைய விருப்பமுள்ளவனும், டம்பமும் அகங்காரமுமற்றவனும் வித்வானுமான பிராம்மணன் மனத்தால் பரமாத்மாவைத் தன்னிடத்தில் பார்க்கிறான். அந்த ஸாதுவானவன் சித்தத்தைப் பரமாத்மாவினிடத்தில் செலுத்தச் சக்தியுள்ளவனாயிருந்தால் அப்பொழுது அவன் பிரம்மத்தை அடைவிக்கும் தியானம் செய்யும் தன்மையுள்ளவனாக இருந்து கொண்டு பரமாத்மாவைத் தன்னிடத்தில் பார்க்கிறான்.

எவன் எப்பொழுதும் அடக்கமும் தியானமுள்ளவனும், தைர்யமுள்ளவனும் இந்திரியங்களை வென்றவனுமாக இருக்கிறானோ அவன் நன்கு யோகம் செய்து மனத்தால் பரமாத்மாவைப் பார்க்கிறான். ஒரு மனிதன் ஸ்வப்னத்தில் கண்டவனை (கனவில் கண்டவன்) இவனென்று பார்ப்பது போல நன்றாக யோகம் செய்பவன் (யோகம் செய்யும் பொழுது பரமாத்மாவை உலக ஸ்வரூபமாகக் கண்டு யோகம் நின்ற பின்னும்) பரமாத்மாவை அவ்வித ஸ்வரூபமுள்ளவர் போலவே பார்க்கிறான். முஞ்சத்திலிருந்து ஈர்க்கை வேறுபடுத்திக் காட்டுவது போல் யோகியானவன் ஆத்மாவைத் தேகத்திலிருந்து வேறுபடுத்திப் பார்க்கிறான். முஞ்சத்தைச் சரீரமாகவும் இஷீகத்தை ஆத்மாவைப் பற்றிய மாயையாகவும் சொல்லுகிறார்கள். யோகத்தைத் தெரிந்தவர்களால் இது மிகச் சிறந்த உதாரணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சரீரியான (யோகியான) வன் எப்பொழுது தன்னை யோகியாக நன்கு பார்க்கிறானோ அப்பொழுது அவனுக்கு மூவுலகங்களுக்கும் பிரபுவாயிருந்தாலும் ஒருவனும் பிரபு வல்லன். (அந்த

யோகியானவன்) மூப்புச் விலக்கி இஷ்டப்படி வெவ்வேறு சரீரங்களை அடைகிறான்; துக்கப்படவும் மாட்டான்; ஸந்தோஷப்படவும் மாட்டான். இந்திரிய ஜயமுள்ள யோகியானவன் தேவர்களுக்கும் தேவனாயிருக்கும் தன்மையைப் பெறுவான்; நிலையற்றதான சரீரத்தை விட்டு அழிவற்ற பிரம்மத்தையும் அடைவான். உலகங்கள் அழியும் போதும் அவனுக்குப் பயம் உண்டாகிறதில்லை. பிராணிகள் கஷ்டப்படும் போதும் அவன் ஒன்றாலும் கஷ்டப்படான். ஆசையற்றவனும் சாந்தமான மனமுள்ளவனுமான யோகியானவன், சேர்க்கையினாலும், ஸ்நேகத்தினாலும் உண்டானவைகளும் கோரமுமான துக்கம், சோகம் என்னும் மலங்களால் நிலைகுலைய மாட்டான்; இவனை ஆயுதங்கள் அடிக்கமாட்டா. இவனுக்கு மரணமும் இல்லை. இதைக் காட்டிலும் மேலான ஸுகம் ஒன்றும் உலகத்தில் ஓரிடத்திலும் காணப்படவில்லை.

அவன் ஆத்மாவை நன்கு யோகமுள்ளதாகச் செய்து பரமாத்வானிடத்திலேயே நிலை பெற்றிருப்பான். அவன் ஜரையும் துக்கமும் அற்றவனாகி ஸுகமாக நித்திரையும் செய்வான். இந்த மானிட சரீரத்தை விட்டு இஷ்டப்படி (வேறு) சரீரங்களை எடுத்துக் கொள்வான். அவன் (யோகத்தாலாகிய ஐஸ்வர்யத்தை) அனுபவிக்கும் போது (யோகத்திலிருந்து) வைராக்கியத்தை எவ்விதத்திலும் அடையக் கூடாது. நன்றாக யோகம் செய்தவன் எப்பொழுது பரமாத்மாவைத் தன்னிடத்திலேயே பார்க்கிறானோ அப்பொழுதே ஸாக்ஷாத் இந்திரனுடைய பதவியையும் விரும்ப மாட்டான். பிரம்மத்தை அடைவிக்கும் தியானம் செய்யும் ஸ்வபாவமுள்ளவன் யோகத்தை அடையும் விதத்தைக் கேள். வேதாந்த ஸ்ரவணம் செய்து அவ்வுபதேசத்தை ஆலோசித்து எந்தச் சரீரத்தில் வஸிக்கிறானோ அந்தச் சரீரத்திற்குள் மனத்தை நிறுத்த வேண்டும்; வெளியில் செலுத்தக் கூடாது. சரீரத்தினுள்ளிலிருந்து கொண்டு வாஸம் செய்வதற்கேற்றதான மூலாதாரம் முதலான சக்ரங்களுள் ஒன்றில் கர்மேந்திரியங்களுடனும், ஞானேந்திரியங்களுடனும் கூடின மனத்தை நிலை நிறுத்த வேண்டும். (அந்தச்) சக்ரத்தில் தியானம் செய்து எல்லாமாயிருக்கும் பிரம்மத்தை அவன் எந்தக் காலத்தில் பார்க்கிறானோ அக்காலத்தில் அவனுடைய மனமும் வெளியிலுள்ள ஒன்றையும் அறிகிறதில்லை. ஜனங்களில்லாத வனத்தில் சப்தமில்லாத இடத்தில் இந்திரியங்களின் கூட்டத்தை நன்றாக அடக்கிச் சரீரத்திற்கு வெளியிலும் உள்ளிலும் நிறைந்திருக்கும் பிரம்மத்தை ஒருவழிப்பட்ட மனமுள்ளவனாக இருந்து கொண்டு தியானம் செய்ய வேண்டும். பற்களிலும், தாலுவிலும், நாவிலும், நாவின் கீழ்ப்பக்கத்திலும், கண்டத்திலும் ஹிருதயத்திலும், ஹிருதய பந்தனத்திலும் தியானம் செய்ய வேண்டும் என்றேன். மதுஸூதனரே! என்னால் இவ்விதம் சொல்லப்பட்ட மேதாவியான அந்தச் சிஷ்யன் மறுபடியுமே சொல்ல மிகக் கடினமான இந்த மோக்ஷ தர்மத்தைப்பற்றி வினவலானான்.

(தொடரும்)

# சுக நாஸ உபதேசம்

**ஸ்ரீமதி விசாலாக்ஷி சங்கரன்**

சுமார் 7 ஆவது நூற்றாண்டில் பிறந்தவர் பாணபட்டர். மிகச்சிறந்த கவி **'பாணோச்சிஷ்டம் ஸர்வம்'** என்று கவிகளாலும் பண்டிதர்களாலும் கொண்டாடப்பட்டவர். **'கௌட'** ரீதியில் எழுதப்பட்ட அவரது நூல்கள் ஜகத் ப்ரசித்தமானவை. வாக் சாதுர்யம், நீண்ட ஸமாஸங்கள், அத்புதமான கற்பனை வளம் என்று பல வகையான சிறப்புகளைக் கொண்டவை அவரது காவ்யங்கள். **'சண்டீ சதகம்'** என்னும் க்ரந்தத்தில் சக்தியின் புகழைப் பாடுகிறார். **'ஹர்ஷ சரித்ரம்'** என்னும் நூலில் ஹர்ஷ அரசனின் சரித்ரத்தைக் கூறுகிறார். **'காதம்பரி'** என்னும் உரை நடைக் காவ்யத்தில் மூன்று தலை முறைக் காதலை மிக அழகாக விவரிக்கிறார். அந்த காதம்பரியில் தான் சுக நாசர் என்னும் ரிஷி சந்த்ராபீடன் என்னும் இளவரசனுக்கு வாழ்வியல் தத்வங்களை மிக அழகாக உபதேசிக்கிறார். இதை அனைவரும் முக்யமாக இளைஞர்கள் படிக்க வேண்டும் என்பதற்காக மொழி பெயர்த்துத் தருகிறோம். மூலத்தையும் ராகத்தோடு படிக்கவும். மிக ரஸமாக இருக்கும்.

(ஆர்)

## लक्ष्मीस्वभाव:

**गुणवन्तम् अपवित्रम् इव न स्पृशति । उदारसत्त्वम् अमङ्गलम् इव न बहु मन्यते । सुजनम् अनिमित्तम् इव न पश्यति । अभिजातम् अहिम् इव लङ्घयति । शूरं कण्टकम् इव परिहरति । दातारं दुः स्वप्नम् इव न स्मरति । विनीतं पातकिनम् इव न उपसर्पति । मनस्विनम् उन्मत्तम् इव उपहसति ।**

எவ்வாறு அசுத்தமான பொருட்களைத் தொடுவதற்கு அஞ்சுவோமோ அதுபோல் நற்குணங்கள் பொருந்தியவனிடம் லக்ஷ்மி சேர்வதில்லை. அமங்கலமான வஸ்துவை எவ்வாறு பெரிதாகக் கருத மாட்டோமோ அதுபோல் மிகுந்த பலத்தை கொண்டவனை லக்ஷ்மி தீண்டுவதில்லை. நல்ல மனிதனை கெட்ட சகுனம் போல் பார்ப்பதில்லை. நல்ல குலத்தில்

பிறந்தவனை பாம்பென்று நினைத்துத் தாண்டுவதில்லை. சூரனை முள்போல் தவிர்க்கிறாள். கொடை வள்ளலைக் கெட்ட கனவு போல் மறந்து விடுகிறாள். வினயத்துடன் இருப்பவனை கொடிய பாவம் செய்தவன் போல் அண்டுவதில்லை. வீரத்தன்மை உடையவனை பித்து பிடித்தவன் என்று பரிகசிக்கிறாள்.

**परस्परविरुद्धं च इन्द्रजालम् इव दर्शयन्ती प्रकटयति जगति निजं चरितम् । तथा हि – सततम् ऊष्माणम् आरोपयन्ती अपि जाड्यम् उपजनयति । उन्नतिम् आदधाना अपि नीचस्वभावताम् आविष्करोति । तोयराशिसम्भवा अपि तृष्णां संवर्धयति । ईश्वरतां दधाना अपि अशिवप्रकृतित्वम् आतनोति । बलोपचयम् आहरन्ती अपि लघिमानम् आपादयति । अमृतसहोदरा अपि कटुकविपाका । विग्रहवती अपि अप्रत्यक्षदर्शना । पुरुषोत्तमरता अपि खलजनप्रिया ।**

ஒரு மந்திரவாதி ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கும் பொருட்களைச் சேர்த்து கண்டிக்கிறான். அதுபோல் லக்ஷ்மியும் இவ்வுலகத்தில் ஒன்றுக்கொன்று முரண்பாடான செயல்களைச் செய்ய தூண்டுகிறாள். எவ்வாறு என்றால் - எப்பொழுதும் வெப்பத்துடன் இருந்தாலும் அதற்கு முரணாக குளுமையை உண்டு பண்ணுகிறாள். அதாவது எப்பொழுதும் ஒரு மனிதனை சுறுசுறுப்பாக வேலையில் ஈடுபடுத்தினாலும் சிந்தனையில் மந்தமான புத்தியை உண்டாக்குகிறாள். மேன்மையை கொடுத்தாலும் தாழ்மையான சுபாவத்தை ஏற்படுத்துகிறாள். தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடையும் போது தோன்றியவள் லக்ஷ்மி. கடல் எனும் நீரிலிருந்து உண்டானவளாக இருந்த பொழுதிலும், மனிதனிடம் செல்வத்தின் தாகத்தை வளர்க்கிறாள். ஆளுமையை (ஈசனாக இருக்கும் தன்மையை) கொடுத்தும் அமங்கலமான (சிவம் இல்லாத தன்மையை) சுபாவத்தை கொடுக்கிறாள். பலத்தை ஏற்படுத்தினாலும் உடம்பின் லாகவத்தை (சத்தில்லா தன்மையை) உண்டாக்குகிறாள். பாற்கடலில் இருந்து தோன்றியதால் அமிர்தத்தின் சகோதரியாக இருப்பினும் கசப்பான அனுபவங்களை கொடுக்கிறாள். அழகான உருவம் (विग्रहवती - சண்டைகளை தூண்டுபவளாக) கொண்டவளாக இருந்த பொழுதிலும் கண்ணெதிரே தோன்றா உருவம் கொண்டவள்.

புருஷோத்தமனான ஸ்ரீமன் நாராயணரிடம் ஆசையுடன் இருப்பினும் கெட்டவர்களிடம் பிரியமாகவும் இருப்பவள்.

**रेणुमयी इव स्वच्छम् अपि कलुषीकरोति । यथा यथा च इयं चपला दीप्यते, तथा तथा दीपशिखा इव कज्जलमलिनम् एव कर्म केवलम् उद्वमति ।**

புழுதியினால் ஆனவள் போல் தூய்மையானதை கலக்கி விடுகிறாள். ஒரு விளக்கின் ஜ்வாலை எவ்வளவு அதிகமாக இருக்கிறது அதே அளவிற்கு புகைக்கரியை வெளியிடுகிறது. அதுபோல் இந்தச் சபலமான லக்ஷ்மி எவ்வளவு மேலோங்கித் திகழ்கிறாளோ அவ்வளவு கெட்ட செயல்களைச் செய்யும்படி மனிதனை தூண்டுகிறாள்.

**तथा हि इयं संवर्धनवारिधारा तृष्णाविषवल्लीनाम्, व्याधगीतिः इन्द्रियमृगाणाम्, परामर्षधूमलेखा सच्चरितचित्राणाम्, विभ्रमशय्या मोहदीर्घनिद्राणाम्, निवासजीर्णवलभी धनमदपिशाचिकानाम्, तिमिरोद्गतिः शास्त्रदृष्टीनाम्, पुरःपताका सर्वाविनयानाम्, उत्पत्तिनिम्नगा क्रोधावेशग्राहाणाम्, आपानभूमिः विषयमधूनां, सङ्गीतशाला भ्रूविकारवाद्यानाम्, आवासदरी दोषाशीविषाणाम्, उत्सारणवेत्रलता सत्पुरुषव्याहाराणाम्, अकालप्रावृड् गुणकलहंसकानाम्, विसर्पणभूमिः लोकापवादविस्फोटकानाम्, प्रस्तावना कपटनाटकस्य, कदलिका कामकरिणः, वध्यशाला साधुभावस्य, राहुजिह्वा धर्मेन्दुमण्डलस्य ।**

லக்ஷ்மியானவள் - பேராசை எனும் விஷக்கொடிகளை வளர்க்கும் தண்ணீர் ஊற்று. ஐம்புலன்கள் எனும் மிருகங்களை மயக்கும் வேடுவனின் பாட்டு. நல்லோர்களின் சரித்திரம் எனும் சித்திரங்களைப் பழுதாக்கும் புகைப்படலம். மோகம் எனும் நீண்ட தூக்கத்திற்கு மாயப் படுக்கை. பணவெறி எனும் பிசாசுகள் வசிக்கும் பாழடைந்த மாளிகை. சாஸ்திரம் எனும் கண்களுக்குப் பார்வையை மறைக்கும் ஒருவித கண் புறநோய். எல்லா கெட்ட செயல்களுக்கும் முன் பறக்கும் கொடி. கோபம் எனும் முதலைகள் வாழும் மூல நதி. போகப் பொருட்கள் எனும் மதுவிற்கு குடிக்கும் இடம். புருவ நெரித்தல்கள் எனும் வாத்தியங்களுக்குச் சங்கீத சபை. பாவங்கள் எனும் பாம்புகள் படுக்கும் குகை. நல்லவர்களின் செயல்களை ஒதுக்கும் பிரம்பு.

நற்குணங்கள் எனும் அன்னப் பறவைகளுக்கு தவறான காலத்தில் ஏற்பட்ட மழைக்காலம் அவதூறுகள் எனும் கொப்பளங்கள் பரவும் இடம். கபட நாடகத்திற்கு முன்னுரை (प्रस्तावना). காமம் எனும் யானைக்குக் கொடிக்கம்பம். நல்ல எண்ணங்களைப் பலி கொடுக்கும் இடம். தர்மம் எனும் சந்திர மண்டலத்திற்கு அதை விளக்கும் ராகுவின் நாக்கு.

**न हि तं पश्यामि यो हि अपरिचितया अनया न निर्भरम् उपगूढः यो वा न विप्रलब्धः । नियतम् इयम् आलेख्यगता अपि चलति, पुस्तकमयी अपि इन्द्रजालम् आचरति, उत्कीर्णा अपि विप्रलभते, श्रुता अपि अभिसन्धत्ते, चिन्तिता अपि वञ्चयति ।**

லக்ஷ்மியால் திடமாகத் தழுவப்பட்ட ஒவ்வொருவரும் அவளால் வஞ்சிக்கப்பட்டவர்களே என்று நான் நினைக்கிறேன். நிச்சயமாகப் படத்தில் வரைந்தால் கூட நடக்கிறாள். புத்தகமயமாகப் பதிக்கப்பட்டவளாக இருப்பினும் மாயாஜாலம் போல் மறைந்து விடுகிறாள். கல்லில் சிலைபோல் செதுக்கி வைத்த போதிலும் ஏமாற்றுகிறாள். செவியுற்ற போதிலும் ஏமாற்றுகிறாள். சிந்தித்த போதிலும் மோசம் செய்கிறாள்.

(தொடரும்)

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

சீடர்களின் கவனத்திற்கு

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்**

சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச் சிறந்ததாகும்.

**“ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்**

# முகாம் நிகழ்ச்சிகள்

முகாம் நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி



**பிப் 28** - ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட 67வது பீடாதிபதி ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ மஹாதேவேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் ஆராதனை மஹோத்ஸவம் திருவானைக் கோவில் முகாமில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

**மார்ச் 1** - சென்னை நாரத கான சபாவில் 1.3.25ல் நடைபெற்ற சித்ர வீணா ரவி கிரணின் ‘‘ஜோதிர்லிங்க கீதா மாலா’’ நிகழ்ச்சிக்கு பூஜ்ய ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் அனுக்ரஹ பாஷணம் அளித்து அருளினார்கள்.

**மார்ச் 2** - பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஸ்ரீ தியாக ப்ரம்மத்தின் நினைவு இல்லத்திற்கு விஜயம் செய்தார்கள். தொடர்ந்து எம். ஆர். வி. வேத தர்ம சபாவில் பாத பூஜை மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்கள். மேலும் திருவையாறு அக்ரஹாரத்தில் பல்வேறு இல்லங்களுக்கும் விஜயம் செய்தார்கள்.

பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள் ஸ்ரீ அபீஷ்ட வரத மஹா கணபதி திருக்கோவிலுக்கும், ஸ்ரீ ஆட்கொண்டார் கோவிலுக்கும் விஜயம் செய்தார்கள். தொடர்ந்து அறம் வளர்த்த நாயகி சமேத ஸ்ரீ ஐயாரப்பர் கோவிலுக்கும் விஜயம் செய்தார்கள். இத்திருக்கோவில் கும்பாபிஷேகம் கடந்த ரேவதி நக்ஷத்திரத்தில் நடைபெற்றுள்ளது. பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் விஜயம் மண்டலாபிஷேக சமயம் அதே ரேவதி நக்ஷத்திரத்தில் சிறப்பாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

**மார்ச் 4** - பூஜ்ய ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் தஞ்சை ஸ்ரீ பங்காரு காமாக்ஷி அம்மன் திருக்கோவிலுக்கு மாலை விஜயம் செய்தார்கள்.

**மார்ச் 6** – திருவானைக் கோவிலில் உள்ள ஏக வீர தேவி திருக்கோவிலுக்கு விஜயம் செய்தார்கள். பூஜைகள் மற்றும் ஹாரத்திக்கு பின்னர் வந்திருந்த பக்தர்களுக்கு அனுக்ரஹபாஷணம் அளித்தருளினார்கள்.

திருவானைக்காவில் ஜம்புகேஸ்வர க்ஷேத்திரத்தில் ஒரு மாத நீண்ட விஜயத்தில் முக்கிய நிகழ்ச்சிகள் பல நடைபெற்றுள்ளன. முக்கிய நிகழ்வாக சரித்திர புகழ்பெற்ற ஆன்மீக நிகழ்ச்சியாக ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாள் தாடங்க பிரதிஷ்டை நடைபெற்றது. பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் அலகாபாத் கும்பமேளா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின 57வது ஜெயந்தி மஹோத்ஸவம் வேத பாராயணங்கள், ஹோமங்களுடன் வெகு சிறப்பாக முகாமில் நடைபெற்றது. மேலும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட 66 மற்றும் 67வது பீடாதிபதிகளின் ஆராதனை மஹோத்ஸவங்களும் நடைபெற்றன. முகாம் நிகழ்ச்சிகளின் பகுதியாக பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் பல்வேறு இடங்களுக்கும் விஜயம் செய்தார்கள்.

**மார்ச் 8** – முகாம் திருவானைக்கோவிலில் மூன்று கால பூஜைக்கு பின்னர் விழுப்புரத்திற்கு புறப்பட்டது. இந்த இடம் மிக முக்கியத்துவம் வாய்ந்த பூஜ்ய பரமாசார்யர்களை உலகிற்கு அனுக்ரஹித்து வழங்கிய இடமாகும்.

**மார்ச் 9** – விழுப்புரத்தில் ஒரு நாள் பூஜைகள் முடிந்த பின்னர் முகாம் காஞ்சிபுரத்திற்கு வந்து சேர்ந்தது.

**மார்ச் 11** – காஞ்சிபுரம் ஸ்ரீ மடத்தில் பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகளின் 7வது வார்ஷிக ஆராதனை நிகழ்ச்சிகள் பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகளின் முன்னிலையில் நடைபெற்றன.

ஆராதனை தினத்தன்று ஏகாதச ருத்ர ஜப ஹோமம் நடைபெற்றன. விசேஷ அபிஷேகங்கள் பூஜ்ய ஸ்ரீ மஹா சுவாமிகள் அதிஷ்டானத்தில் நடைபெற்று அலங்காரங்கள், ஹாரத்தியும் நடைபெற்றன.

முன்னதாக பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள் ஹோம பூர்ணாஹுதி நிகழ்ச்சிகளில் அதிஷ்டானத்தில் கலசதீர்த்த அபிஷேகங்களும் செய்வித்து அருளினார்கள்.

காலை 9.00 மணி முதல் சங்கீதாஞ்சலி தியாகராஜ பஞ்சரத்ன கீர்த்தனைகள், கோஷ்டி கானங்கள் நடைபெற்றன. மேலும் சம்பிரதாய பஜனை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம், ஸ்ரீ திருமலை திருப்பதி தேவஸ்தானம், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், திருவானைக் கோவில் மற்றும் பல்வேறு கோவில்களிலிருந்தும் பிரசாதங்கள் ஆராதனை மஹோத்ஸவத்தில் அதிஷ்டானத்தில் வழங்கப்பட்டன.

ஆராதனை நிகழ்ச்சியில் பல்வேறு சந்நியாசிகளும், சாதுக்களும் கலந்து கொண்டார்கள்.

ஏராளமான பக்தர்கள் பூஜையில் கலந்து கொண்டு பூஜ்ய ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளிடமிருந்து பிரசாதங்கள் பெற்றுக் கொண்டார்கள். வருகை தந்த பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

மாலை ராஜவீதிகளில் தங்கரத சேவை நிகழ்ச்சி நடைபெற்றது. பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் பிரதோஷ பூஜையும் செய்வித்தருளினார்கள்.

**மார்ச்** 20 - இன்று மூன்று கால பூஜைகள் முடிந்து முகாம் ஸ்ரீ காளஹஸ்திக்கு புறப்பட்டது. மார்ச் மாதம் 28ம் தேதி வரை ஸ்ரீ காளஹஸ்தியில் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜைகள் தொடர்ந்து நடைபெறும்.

**ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர**



# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 29

## ஸ்ரீ ஆனந்த பூர்ண வித்யாஸாரர்

உபநிஷத்துக்களில் கூறப்பட்ட கருத்துக்களை வேதாந்த ஸூத்ரங்களாக்கி அத்வைத தர்சனத்திற்குப் பொக்கிஷமாக அளித்தார் வேதவியாஸர். இவரது ஸுத்ரங்களுக்குப் பாஷ்யம் எழுதி அப்பொக்கிஷத்தின் பெருமையை உலகறியச் செய்தார் ஸ்ரீ சங்கரர். ஸ்ரீ சங்கர பாஷ்யம் ஒரு ஞான ஏரி என்றால் தொடர்ந்து வந்த ஆசார்யர்கள் அந்த ஞான ஏரியிலிருந்து பற்பல கண்மாய்களை தங்கள் வியாக்கியானத்தின் மூலம் வெட்டி ஞான தாகம் கொண்டவர்களின் தாகத்தைத் தீர்த்து வைத்தனர். இவர்கள் தங்களது வாதத் திறமையால் ஸ்ரீ சங்கர தர்சனத்திற்கு மெருகூட்டி அலங்கரித்து கற்றோரும், மற்றோரும் மெச்சும்படி உரைகள் எழுதினர். எனவே இவ்வுரைகள் வாதப்ரஸ்த்தானம் என வழங்கப்பட்டன.

ஸ்ரீ ஹர்ஷரின் 'கண்டன கண்ட காத்யம்' இந்த வாத ப்ரஸ்தான க்ரந்தங்களுக்குள் முதன்மையானதாகக் கருதப்படுகிறது. வாதங்களும், நடையும் கற்றோரால் கூட புரிந்து கொள்ளக் கடினமாக இருந்தன. இதன் பொருட்டு இதனை எளிமையாக்கித் தரும் வகையில் எழுதப்பட்ட உரை வித்யாஸாகரீ. இதனை எழுதியவர் ஸ்ரீ ஆனந்த பூர்ணர். ஸ்ரீ ஹர்ஷரின் நூலிலுள்ள முடிச்சுக்களை எளிதில் அவிழ்த்து விளக்கினார். சூஷ்மமான கருத்துக்களை யாவரும் உணரும் வண்ணம் எளிய முறையில் எடுத்துக் கூறினார். நியாயம், பிரபாகர மதம், பாட்ட மதம் போன்றவற்றைத் தீவிரமாக ஆராய்ந்து தான் சொல்ல வந்த கருத்துக்களை ஆணித்தரமாகவும், சுலபமாகப் புரிந்து கொள்ளுமாறும் எடுத்துரைத்தார்.

அத்வைத சித்தாந்தத்தை மறுக்கும் பண்டிதர்களின் வாதங்களை தனது அளப்பரிய சாஸ்திர ஞானத்தினால் தவிடு பொடியாக்கியவர் இவர். ந்யாய வைசேஷிகர்களிடம் காணப்படும் குறைகளைத் தெளிவாக எடுத்துக்காட்டி அவ்வாதங்களின் தனித் திறமையால் ஸ்ரீ சங்கர தர்சனத்திற்கு ஒவ்வாமையை வெளிச்சம் போட்டுக் காட்டும் இவரது பாங்கு போற்றுதற்குரியது. ஸ்ரீ ஸுரேஸ்வராசாரியரின் ப்ருஹதாரண்யக உபநிஷத் பாஷ்ய வார்த்திகத்திற்கு ஒரு உரை எழுதியுள்ளார். ஞான கர்ம ஸமுச்சய வாத நிராகரணம் பிரபஞ்சத்தின் அநிர்வசநீயத்தன்மை, ஆத்ம தத்துவத்தின் இரண்டற்ற நிலை ஆகிய மூன்றை முக்கியமாக எடுத்துக் கூறுகிறது வார்த்திகம். இவற்றின் நுணுக்கங்களை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து நிர்ணயிக்கும் ஸ்ரீ ஆனந்த பூர்ணரின் திறமை சொல்லற்கரியது. **நியாய கல்பலதிக:** என்ற பெயரில் இவரால் எழுதப்பட்ட

வார்த்திகத்திற்கான உரை அத்வைத ஸம்பிரதாய பிரவர்த்தகர்கள் அனைவராலும் மிகவும் போற்றப்படும் ஒரு எளிய நூலாகும். பூர்வ மீமாம்ஸா வாதங்கள், நியாய வைசேஷிகர்களின் வாதங்கள் போன்றவற்றை மிகத் தீவிரமாகக் கண்டிக்கும் இவர் பூர்வ மீமாம்ஸகர்களின் வாதங்கள் சிறிதும் ஸாரமற்றவை எனத் தெளிவாக விளக்கியுள்ளார். ஏனெனில் பூர்வ மீமாம்ஸகர்கள் ஈச்வரனின் இருப்பை ஏற்கவில்லை. பூர்வ மீமாம்ஸகர்கள் கர்மகாண்டத்திற்கு சபரஸ்வாமியின் வியாக்யானமான சபர பாஷ்ய கருத்துகளுக்கு மாறுபட்டிருப்பதால் ஞானகாண்ட பாகமான உபநிஷத்துக்களின் கருத்துக்கள் ஏற்கத் தக்கதல்ல என்கின்றனர். இதற்கு பதிலளிக்கும் ஸ்ரீ ஆனந்த பூர்ணர் ஆசார்ய ஸ்ரீ சங்கரரின் உபநிஷத் பாஷ்ய கருத்துகளுக்கு மாறுபட்டிருப்பதால் சபரஸ்வாமியின் கருத்துக்கள் ஏற்கத் தக்கவையல்ல என்கிறார்.

ஸ்ரீ ஆனந்த பூர்ணர் 10 நூல்கள் எழுதி அத்வைத ஞானப் பூஞ்சோலைக்கு அழகும், நறுமணமும் ஊட்டியுள்ளார். அவையாவன. 1. வித்யாஸாகரீ எனப்படும் கண்டன காத்ய டீகா, 2. ந்யாய திருகல்ப லதிகா, 3. ந்யாய சந்த்ரிகா, 4. பாவஸுத்தி எனப்படும் ப்ரம்ஹஸித்தி வியாக்யானம், 5. ஸமன்வய ஸுத்ர வ்ருத்தி, 6. பஞ்சபாதிகா வ்யாக்யானம், 7. மஹாவித்யா விடம்பன வ்யாக்யானம், 8. ந்யாய ஸார வ்யாக்யானம், 9. ப்ரக்ரியா மஞ்சரி எனப்படும் காசிகா வியாக்யானம், 10. மோக்ஷதர்ம வியாக்யானம்.

இவரது நூல்கள் ஆத்ம விசாரத்திற்குப் பெரிதும் அனுகூலமாக இருப்பவை. 'ஸ்வேத கிரி' என்ற யதிவரர் இவரது வித்யா குருவாக அறியப்படுகிறார். சீடர்களின் அறிவாகிய தாமரையை மலரச் செய்கின்ற ஞான சூரியனான ஸ்ரீ ஸ்வேதகிரி குருவை நமஸ்கரிக்கிறேன் என்று ந்யாய கல்பலதிகா வியாக்யானத்தின் இறுதியில் போற்றுகிறார். **'ஸ்ரீமத் ஸ்வேத கிரிம் வந்தே சிஷ்ய தீபத்ம பாஸ்கரம்'** பிறிதோரிடத்தில் தன்னை **அபயாநந்த பூஜ்யபாத சிஷ்ய:-** பூஜிக்கத் தகுந்த திருவடிகளை உடைய அபயானந்தரின் சீடன் என்று சொல்லிக் கொள்கிறார். இதனால் அபயானந்தர் இவரது தீக்ஷாகுருவாக இருக்க வேண்டும். ந்யாய திரு கல்ப லதிகாவின் ஆரம்பத்திலும், முடிவிலும் கோகர்ணேஸ்வரரைத் துதிப்பதால் இவர் கோகர்ண க்ஷேத்திரத்தில் வசித்திருக்கலாம் என்று அறியப்படுகிறது. கோகர்ணத்தைக் காம தேவன் என்ற மன்னன் ஆளும் போது ப்ரக்ரியா மஞ்சரி நூலை எழுதியதாகக் குறிப்பிடுகிறார். இம்மன்னனின் காலம் கி.பி. 1350. எனவே ஸ்ரீ ஆனந்த பூர்ணரும் இதே காலத்தில் வாழ்ந்தவராக இருக்க வேண்டும். இவரைப் பற்றிய வேறு வரலாற்றுக் குறிப்புகள் எதுவும் முழுமையாகக் கிடைக்கவில்லை.

(வளரும்)

# பெண்கள் தெரிந்து கொள்ள.... 2

இந்த உலகம் எப்பொழுது, யாரால் படைக்கப்பட்டதென்று இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆகவே அநாதி காலந் தொட்டு உலகம் இருந்து வருவதாகச் சொல்கிறார்கள். இந்த மாபெரும் உலகைப் படைப்பதற்கு ஒரு மாபெரும் சக்தி காரணமாக இருந்திருக்க வேண்டும். இதை வைத்துத் தான் ஸ்ரீ ஆதிசங்கரர் தம்முடைய சௌந்தர்யலஹரி என்னும் நூலில், 'சக்தி இல்லாமல் இந்த உலகில் ஒரு துரும்பைக் கூட அசைப்பதற்குச் சிவன் போன்றவர்களால் கூட முடியாது,' என்று கூறுகிறார்.

பராசக்தி, லக்ஷ்மி, துர்கா, சரஸ்வதி என்ற பெயர்களோடு மூன்று சக்திகளாக விளங்குகிறாள். அவற்றுள் சரஸ்வதி தேவி பிரம்ம வித்யா ரூபிணியாக எப்பொழுதும் ஒரே வடிவத்தில் விளங்குகிறாள். ஸ்ரீ மஹா விஷ்ணுவிற்கு எப்படிப் பல அவதாரங்களோ அதுபோல் மஹாலக்ஷ்மியும் பல அவதாரங்கள் எடுத்துள்ளாள். பரமேஸ்வரன் எப்பொழுதும் ஒரே நிலையில் இருக்கிறார். அவதாரங்கள் எடுக்கவில்லை. ஆனால் பார்வதி தக்ஷனுக்குப் பெண்ணாக ஒரு முறையும், ஹிமவானுக்குப் பெண்ணாக ஒரு முறையும் வந்ததாகக் கூறப்படுகிறது. உலகில் தம்பதிகளுக்கு எடுத்துக்காட்டாகப் பார்வதி - பரமேஸ்வரனையும், லக்ஷ்மி - நாராயணனையும் குறிப்பிடுவார்கள். இதை வைத்துத்தான் நமது வீடுகளிலே திருமணம் நடக்கும்போது, 'கௌரீ கல்யாணம் வைபோகமே, சீதா கல்யாணம் வைபோகமே' என்று பாடுவார்கள்.

ஹிந்து மதத்தில் தத்துவ ரீதியாக நிர்குண, நிராதார, அகண்ட, சச்சிதானந்த பரம்பொருள் ஒன்றுதான் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட பரம்பொருளை அடைவதற்கும், உலகியல் நடப்பைச் சொல்வதற்கும், உருவ வழிபாட்டையும் அநாதி காலந்தொட்டு ஹிந்து சமயம் ஏற்றுக் கொண்டுள்ளது. முருகனைப் பற்றி பாடும் போது கூட,

**அருவமும், உருவவுமாகி, அனாதியாய், பலவாய்,**
**ஒன்றாய், ப்ரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பதோர்,**
**கருணை கூர் முகங்கள் ஆறும்**
**கரங்கள் பன்னிரண்டும் கொண்டே**
**ஒருதிரு முருகன் உதித்தாங்கினன் உலகம் உய்ய,**

என்று பாடப்பட்டுள்ளது.

பொதுவாகச் சக்திக்கு உருவம் கிடையாது. சக்தியைத் தாங்கி நிற்பதற்கு ஓர் உருவம் வேண்டும். மின் சக்தி இருக்கிறது. அதற்கு மின் கம்பி (ஒயர்) தேவைப்படுகிறது. அது போலத்தான் நம் உடலிலும் நடக்கும் சக்தி, பார்க்கும் சக்தி, கேட்கும் சக்தி, சிந்திக்கும் சக்தி இப்படிப் பல வகையான சக்திகள் உள்ளன. அந்தச் சக்திகளின் வண்ணமும், வடிவமும் என்ன? என்று எந்த விஞ்ஞானியும் இதுவரை கண்டு பிடிக்கவில்லை. ஆனால் அந்தச் சக்திகளுக்கு ஆதாரமான உறுப்புக்கள் உடலில் உள்ளன. அதுபோலத்தான் பராசக்தியின் வடிவத்திற்கும் எந்த விதமான வண்ணமும், பெயரும் கிடையாது. உலக நன்மைக்காக உருவமெடுத்து அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள். இப்படி ஒரு சமயம் தக்ஷனின் புத்திரியாகப் பிறந்து பரமேஸ்வரனை மணந்தாள். அப்பொழுது அவளுக்கு தாக்ஷாயணி என்று பெயர்.

ஒரு சமயம் தக்ஷன் பெரிய வேள்வி செய்தான். அந்த வேள்வியைக் காணத் தான் செல்ல வேண்டுமெனப் பரமேஸ்வரனிடம் அனுமதி கேட்டாள். பரமேஸ்வரன் அந்த நேரத்தில் தியானத்தினால் ஆலோசித்து 'இந்த வேள்வியில் என்னுடைய அம்சமாக உள்ள ருத்திரனுக்கு ஹவிர் பாகம் இல்லாமல் இந்த யாகம் நடத்த உள்ளனர். ஆகவே, என்னை அவமதிப்பதற்காகவே இந்த யாகம் நடத்தப்படுவதால் நீ செல்ல வேண்டாம்,' என்று சொல்கிறார். அப்பொழுது தன்னுடைய தகப்பனாரையும், அங்கு வர இருக்கும் உறவினர்களின் கூட்டத்தையும் காணும் ஆர்வம் மேலிட்டதினால் பரமேஸ்வரனுடைய சொல்லுக்கு மறுப்பாக, தன்னுடைய தகப்பனார் செய்யும் வேள்வியின் பொருட்டு வரும் அனைவரையும் பார்க்க வேண்டுமென்று, வற்புறுத்தி விட்டு அனுமதியை எதிர்பார்க்காமல், பிறந்த வீட்டுப் பாசத்தின் மேல் தகப்பனார் வீட்டிற்குச் செல்கிறாள். தக்ஷன் வேள்விக்கான ஏற்பாடுகளைச் செய்து வேள்வியைத் தொடங்குகிறான்.

தாக்ஷாயணியை எவரும் விசேஷமாகக் கவனிக்கவில்லை. வேள்வியில் ரிஷிகளெல்லாம் பரமேஸ்வரனுக்குச் சமமான ருத்திரனுக்கு ஹவிர்பாகம் கொடுக்க வேண்டும் என்று தக்ஷனிடம் சொன்னதற்கு, தக்ஷன் அகங்காரத்துடன், 'என்னுடைய மாப்பிள்ளை பரமேஸ்வரன் இந்த வேள்விக்கு வந்திருக்க வேண்டும். அகங்காரத்துடன் இருக்கும் பரமேஸ்வரனுக்குச் சமமான ருத்திரனுக்கு இங்கு ஹவிர்பாகம் கிடையாது,' என்று சொல்லிப் பரமேஸ்வரனை மேலும் பல வகையில் நிந்தனை செய்கிறார்.

அந்தப் பரமேஸ்வரனை நிந்தனை செய்த வார்த்தைகளைக் கேட்ட தாக்ஷாயணி காது கொடுத்துக் கேட்க முடியாமல் தக்ஷன் செய்த வேள்வியிலேயே தன்னுடைய உடலை மாய்த்துக் கொண்டு விட்டாள். அப்பொழுது பரமேஸ்வரனுக்கு விவரம் தெரிந்து, வீரபத்திரர் தோன்றி தக்ஷனுக்கும் தகுந்த சிக்ஷை அளித்ததாக வரலாறு. இந்தக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மைகள்.

1. பதி சொல்லைத் தட்டாமல் நடக்க வேண்டும்.

2. பதியைப் பற்றி நம் காதில் விழும்படி குறை கூறினாலோ, நிந்தனை செய்தாலோ, அதைப் பொறுத்துக் கொண்டு அங்கேயே இருக்கக் கூடாது. வேறு இடத்திற்கு ஒதுங்கிப் போய்விட வேண்டும்.

3. காளிதாசன் என்னும் பெரிய கவி தாக்ஷாயணியானவள் பரமேஸ்வரனின் நிந்தனையைக் கேட்டு நெருப்பில் விழுந்த நிலையை ''சதி'' என்ற சொல்லை உபயோகப்படுத்துகிறார். தற்காலத்தில் கணவன் இறந்த பிறகு உடன்கட்டை ஏறுவதை சதி என்று சொல்லி விவாதத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். உண்மையான குடும்பப் பெண்ணானவள் தன்னுடைய பதியின் மீது எந்தவித அவச்சொல் ஏற்பட்டாலும், அதைக் காது கொடுத்துக் கேட்கக் கூடாது என்பதுதான் நிலை. குடும்பப் பெண் கணவனிடம் எப்படியிருக்க வேண்டுமென்று நீதி நூல் கூறுகிறது.

**கார்யேஷு தாசீ கரணேஷ மந்த்ரீ**
**ரூபேஷ லக்ஷ்மீ க்ஷமயா தரித்ரீ**
**ஸ்நேஹே ச மாதா சயனேது வேஸ்யா**
**ஷட்தர்ம யுக்தா குலதர்ம பத்னீ**

பணிவிடை செய்வதில் வேலைக்காரியாகவும், ஆலோசனை கூறுவதில் அமைச்சராகவும், அழகில் லக்ஷ்மியாகவும், பொறுமையில் பூமாதேவியாகவும், பள்ளியறையில் வேசியாகவும், விளங்குபவளே குலப் பெண்ணாவாள்.

இப்படி உலகில் குடும்பப் பெண் கணவனோடு இரு சரீரங்களுடன் ஒரு மனத்துடன் வாழ வேண்டும்.

(தொடரும்)

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

பி பி ஜோஷி



ஸ்ரீ சரணர்கள் குல்பர்காவில் முகாமிட்டிருந்தார். ஞான மூர்த்தியை தர்சிக்க என் நண்பர் ஸ்ரீ ரகுராமனுடன் சென்றேன். மத்யானம் 1 மணிக்கு அங்கு சென்றோம்.

கடுமையான தண்ணீர்ப் பஞ்சம். தாகத்துக்குத் தண்ணீர்கூடக் கிடைக்கவில்லை. அருகாமையில் இருந்த ஒரு சிறிய கிணற்றிலிருந்து நீரை எடுத்து ஸ்னானம் செய்தபின் தர்சனத்திற்கு விரைந்தோம். எங்களை ஆசீர்வாதம் செய்தபின் உணவருந்த அனுப்பினார்.

அப்போது ஜில்லா கலக்டரும் அதிகாரிகளும் அங்கு வந்திருந்தனர். அவர்கள் 6 வருடங்களாக பருவ மழை பொய்த்து விட்டதாகவும் கடுமையான நீர்ப்பஞ்சம் நிலவுவதாகவும் அதைப் போக்க பெரியவா தான் அருள் புரிய வேண்டும் என்று விண்ணப்பித்தனர். அவர்களிடம் இந்த ஊரில் பஜனை கோஷ்டி உள்ளதா என வினவினார். அவர்களும் உள்ளது என்று சொல்ல அவர்களை உடனே பஜனை செய்யக் கட்டளை இட்டனர். கலெக்டரும் மாலையே பஜனைக்கு ஏற்பாடு செய்தார்.

ஸ்ரீ சரணர்கள் அவர்களின் மத்தியில் அமர்ந்து கேட்டார். காசியிலிருந்து கங்கை தீர்த்தம் கொண்டு வந்திருப்பதாக ஓரன்பர் கூற கங்கா மாதாவே வந்து விட்டாள் என்று கூறி புன்னகைத்தார். பிறகு பஜனை கோஷ்டியிடம் குறிப்பிட்ட பாடலைப் பாடுமாறு பணித்தார்.

ஆச்சர்யம். பாடலைப் பாடிக் கொண்டிருக்கும் போதே மழை கொட்ட ஆரம்பித்து விட்டது. முகாமிலிருந்த சில பொருள்கள் சேதமுற்றன. சேதமுற்றாலும் பரவாயில்லை. மழை நிரம்பப் பெய்து சகல ஜீவராசிகளும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்று கூறினார். இவரை இவ்வுலகம் பெற என்ன தவம் செய்ததோ !

(தொடரும்)

---

## காஞ்சி பெரியவா அருளிய பொன்மொழிகள்

- பாவ புண்ணியம் என்பது செயலைப் பொறுத்தது அல்ல. செயலாற்றுபவரின் நோக்கத்தைப் பொறுத்தது. நற்செயலாக இருந்தாலும் நோக்கம் தவறானதாக இருந்தால் அது பாவக்கணக்கில் தான் சேரும்.
- தியானம் செய்வது பிறருக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. மனதுக்குள் தாயாரைச் சதா நினைத்துக் கொண்டிருந்தால் போதும்.
- ஆசை, கோபம், துவேஷம், பயம் ஆகிய தீயசிந்தனைகளை மனதை விட்டு அடியோடு அகற்ற வேண்டும். உயர்வு தரும் நல்ல சிந்தனைகளை மட்டுமே அனுமதிக்க வேண்டும்.
- ஒருபோதும் விருப்பு வெறுப்புடன் செயலாற்றுவது கூடாது. மனச் சமநிலையுடன் செயலாற்றும் போது உண்டாகும் மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. அகந்தையுணர்வு இல்லாமல் மனிதன் கடமைகளைச் செய்ய வேண்டும்.
- அறியாமை என்பது வியாதிக்குச் சமமானது. அறியாமை நம்மிடம் இருக்கும் வரை மகிழ்ச்சி உண்டாகாது.
- எந்த வீட்டில், யார் இறக்கும் தறுவாயிலிருந்தாலும் யாரும் கூப்பிடாமலேயே அங்கு சென்று 1008 தடவை ராம நாமம் சொல்லி விட்டு வர வேண்டும். அந்த ஆத்மா முக்தி அடைந்துவிடும். இது ஜீவாத்ம கைங்கர்யம்.

# கற்பின் சிகரங்கள் பேசினால்

*வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்*

## மண்ணின் மகளின் அறவுரைகள்

*ஆதாரம் : வான்மீகி இராமாயணம்*

*பெண்மைக்கு மரியாதையும் மதிப்பும் கொடுத்து கௌரவித்த நாடு பாரத நாடு. பெண்மையின் பெருமையை உலகம் அறிய ஒரு அற்புத காவியம் படைத்தது பாரத நாடு. ஸ்ரீமத் ராமாயணத்தில் (பெருமை மிகு இராமன் வழி) வாழ்க்கைத் துணை நலமாய் வாழ்ந்து காட்டிய மண்ணின் மகள் ஸீதா தேவி. நல்ல அறிவார்ந்த அறமறிந்த அறவாழ்வு வாழ்ந்த அறத்தின் துணை ஸீதாப் பிராட்டி. எனவே இராமாயணத்தை 'ஸீதாயா சரிதம் மஹத்' என்று கௌரவித்தனர். அந்த ஸீதாப் பிராட்டியின் அறம் நிறைந்த சொற்களை அனைவரும் நன்கு அறியவேண்டும் என்பதற்காக இக்கட்டுரையை யாம் வரைகிறோம்.*

### இராமனிடம் கூறிய செய்தி

இராமன் ஸீதையிடம் தான் வனம் போகப் போவதாகச் சொன்ன செய்தி.

**1. குலே மஹதி ஸம்பூதே தர்மக்ஞே தர்மசாரிணி ।**
**ச்ருணு ஜானகீ யேனேதம் க்ரமேணாப்யாகதம் மம ॥**

ஹே! ஸீதே! நீ உயர்ந்த குலத்தில் பிறந்தவள். அறம் அறிந்தவள். அறத்தின் வழி நடப்பவள். அந்த அறத்தின் அடிப்படையில் முறையாக எனக்கு வந்த ஒரு செய்தியை கேட்பாயாக.

**2. சதுர்தச ஹி வாஷாந வஸ்தயம் தண்டகே வனே ।**
**பித்ரா மே பரதஸ்சாபி யௌவராஜ்யே நியோஜித ॥**

என் தகப்பனார் நான் பதினான்கு ஆண்டுகள் தண்டகாரண்ய வனத்தில் வாழவேண்டும் என்றும் பரதன் இளவரசனாக வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

**3. அஹம்சாபி ப்ரதிக்ஞாம் தாம் குரோ: ஸமனுபாலயந் ।**
**வனமத்யைவ யாஸ்யாமி ஸ்த்திரா பவ மனஸ்விட் ॥**

மனதிற்குகந்தவளே! நானும் பெரியவர்களின் வார்த்தையைக் காப்பாற்ற வேண்டும். என்பதற்காக இப்பொழுதே வனத்திற்குச் செல்லப் போகிறேன். நீ உன் மனதை திடப்படுத்திக் கொள்.

4. **ஸா த்வம் வஸேஹ கல்யாணி ராக்ஞ: ஸமனுவர்தினீ ।**
**பரதஸ்ய ரதா தர்மே ஸத்யவ்ரத பராயணா ॥**

அறமறிந்த நீ ! மங்களமானவளே ! பரதனுடைய அரசை பின்பற்றி நடப்பவளாய், ஸத்யத்தைக் காப்பவளாய், இங்கேயே வாழ்ந்து கொண்டிரு.

5. **அஹம் கமிஷ்யாமி மஹாவனம் ப்ரியம்**
**த்வயாஹி வஸ்தவ்ய மிஹைவ பாமினீ ।**
**யதா வ்யலீகம் குருஷே ந கஸ்யசித்**
**ததாத்வயா கார்யம் இதம் வசோ மம ॥**

அம்மா ! இளையவளே! நான் இப்பொழுதே பெருவனம் செல்கிறேன். இனியவளே ! நீ இங்கேயே வசிப்பாயாக. எவருடைய மனமும் நோகாதவாறு செயல்படுபவளாய் என்னுடைய இந்த வார்த்தையின்படி நடந்து கொள்வாயாக.

இப்படி அறத்தின் நாயகன் அறம் அறிந்த ஸீதையிடம் அறவார்த்தைகளைக் கூற, தன்னுடைய அறம் எது என்பதை மிக ஆணித்தரமாக, அதே ஸமயம் பண்பு மாறாத சொற்களால் கூறும் ஸீதாப்பிராட்டியின் அறிவும், அறமும் ஒவ்வொரு பெண்ணும் அறிய வேண்டும்.

6. **கிமிதம் பாஷஸே ராம வாக்யம் லகுதயா த்ருவம் ।**
**த்வயா யதபஹாஸ்யம் மே ஸ்ருதம் நரவரோத்தமா ॥**

என் மனத்திற்கினியவரே ! மனிதர்களில் சிறந்தவரே ! எளிய உறுதியான பரிஹாஸமான வார்த்தையைத் தாங்கள் சொல்லியிருக்கிறீர்களே ! ஏன் இப்படி பேசுகிறீர்கள் ?

7. **ஆர்ய புத்ர பிதா மாதா ப்ராதா புத்ரஸ்ததாஸ்னுஷா ।**
**ஸ்வானி புண்யானி புஞ்ஜானா: ஸ்வம் ஸ்வம் பாக்ய முபாஸதே !**

நல்லொழுக்க சீலர் மகனே ! உமக்கு உண்மை தெரியுமா ! இந்த உலகில் தந்தை, தாய், சகோதரன், மகன், மருமகள் இவர்கள் எல்லாம் தங்கள் தங்கள் புண்யங்களை அனுபவிப்பவர்களாய் அவரவர் பேறுகளை அநுபவிக்கிறார்கள். (ஆனால்)

(தொடரும்)

# ப்ரபோத சிந்தாமணி

*ஸ்ரீ எஸ். ராமசந்திர ஐயர்*

## 17. வார்த்தைகளின் மந்திர சக்தி

**'மாசறு பொன்னே மணியே முத்தே'** என்றெல்லாம் ஒருவரின் பேச்சைப் புகழ்வது உலக வழக்கு. புழு, பூச்சி, பறவை மற்றும் புலி சிங்கம் யானை போன்ற விலங்குகளுக்கு பேசும் திறன் இல்லை. ஆனால் இறைவன் மனிதனுக்கு மட்டுமே பேசும் சக்தியை அளித்து உள்ளான். பேச்சினால் நாம் எல்லோரையும் கவர முடியும். எதையும் சாதிக்கலாம். இந்த உலகத்தையே சொர்க்கமாக மாற்றலாம். இராமாயணம், மகாபாரதம், பாகவதம், புராணங்கள், பகவத் கீதை மற்றும் வேத சாத்திரங்கள் எல்லாம் வார்த்தைகளே அல்லவா?

இந்தப் பேச்சு சில சமயம் நன்மை பயப்பதாகவும் சில சமயம் பெரிய தீங்கு விளைவிப்பதாகவும் இருக்கிறது. நன்கு ஆராயாமல், அவசரத்திலும், கோபத்திலும் கூறிவிடும் வார்த்தைகள் பெரிய அனர்த்தத்தை ஏற்படுத்தி விடுகின்றன. ஆத்திரத்தில் பேசும் வார்த்தைகள் ஒருவரின் மரணத்திற்கே காரணமாகிவிடும். திருவள்ளுவரும் இதையே, **தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு** என்று கூறியுள்ளார்.

அதே போல் எத்தகைய கொடியவனையும் அன்பான வார்த்தைகளால் நல்லவனாக மாற்றி விடவும் முடியும். அச்சமயம் நமக்கு அடக்கமும் விவேகமும் தேவை. ஒருவனது சம்ஸ்காரத்தையும், யோக்கியதையும் அவன் பேச்சிலிருந்தே அறிய முடியும்.

ஒருவருக்கு இனிமையாகப் பேசுவதற்கு படிப்பு, குலம் போன்ற எந்த தகுதியும் தேவையில்லை. அன்பான வார்த்தைகளின் சக்தி அளவிட முடியாதது.

**ப்ரிய வாக்யப்ரதானேன ஸர்வே துஷ்யந்தி ஜந்தவ: ।**
**தஸ்மாத் ததேவ வக்தவ்யம் வசனே கா தரித்ரதா ॥**

பிரியமான பேச்சினால் எல்லா மனிதர்களும் சந்தோஷம் அடைகின்றார்கள். பிரியமான வார்த்தைகளுக்குப் பஞ்சம் உண்டா? நம் வார்த்தைகள் முத்து மாணிக்கம் போல் உயர்வானதாகவும், நம் பேச்சே மந்திரமாகவும் எப்பொழுதும் எல்லோருக்கும் நன்மையையே தருவதாகவும் அமையட்டும்.

# மூக ஸாரம்

## இராமாயணம் ஸ்ரீநிவாஸன்

காஞ்சீ மடத்தை அலங்கரித்த **ஸ்ரீ மூக கவியி**னால் இயற்றப்பட்ட **மூக பஞ்சசதியை** எல்லாரும் அறிவர்.
காமாக்ஷியின் புகழை பல விதமாக அதில் கவி கூறியிருப்பார் புலமை சிறந்த கற்பனை வளம், உயர்ந்த பக்தி இலக்கியமாக மிளிர்கிறது **மூக பஞ்சசதி.**
அந்த ஐநூறு ஸ்லோகங்களிலிருந்து சில முக்யமான ஸ்லோகங்களை **'மூக ஸாரம்'** என்னும் தலைப்பில் மறைந்த **ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீநிவாசன்** தொகுத்து அருளியுள்ளார். பொருள் உணர்ந்து பாராயணம் செய்வோம்.

**परामृतझरीप्लुता जयति नित्यमन्तश्चरी**
**भुवामपि बहिश्चरी परमसंविदेकात्मिका ।**
**महद्भिरपरोक्षिता सततमेव काञ्चीपुरे**
**ममान्वहमहंमतिर्मनसि कापि माहेश्वरी ॥ ९० ॥**

பராம்ருத ஜரீப்லுதா ஜயதிநித்யம் அந்தஶ்சரீ
புவாமப பஹிஶ்சரீ பரமஸம்விதேகாத்மிகா।
மஹத்பரபரோக்ஷிதா ஸததமேவ காஞ்சீபுரே
மமாந்வஹ மஹம்மதிர்மனஸி காபி மாஹேச்வரீ ।। 90 ।।

*(ஸ்துதி சதகம் 90)*

*அம்ருத தாரையால் நனைந்தவளும், உலகில் உள்ளும், புறமும் ஸஞ்சரிப்பவளும், ஸம்வித் ஸ்வரூபிணியும், காஞ்சியில் மஹான்களால் தினம் ஸேவிக்கப்பட்டவளும், மஹேச்வரனுடைய அஹம்கார ரூபினியான காமாக்ஷி எப்போதும் என் மனதில் விளங்குகிறாள்.*